LIBRARY
05 JUL 2012
SERIALS DIVISION

YARL OSAI
யாழ் ஓசை
விலை: 15/= Regested No. 0083/News/2012
ஓங்கி ஒலிக்கும் ஒப்பற்ற நாதம்
ஓசை : 01 நாதம்: 50 புதன்கிழமை 04.07.2012 பக்கங்கள்: 12

சொக்லேட்டால் குழந்தை உயிருக்கு ஆபத்து பக்கம் 05

ஓபன் ஹார்ட் + வைபாஸ் சேர்ஜரி வித்தியாசம்... பக்கம் 09

மாஸ்டர் ஸ்ரீகாந்த் நடிக்கும் சுட்டிப்பையன் பக்கம் 09

கற்பழிக்க முயன்றவனைத் தாக்கிய வொரிஸ் பக்கம் 11

புலிகள் பயன்படுத்திய ஆதனங்களை சுவீகரிக்க இராணுவத்தினர் முயற்சி

யாழ். பொது நூலகத்திற்கு முன்பாகவுள்ள வீதியின் இருமருங்கிலும் நடுவதற்காக வைக்கப்பட்டுள்ள முதுபனையை படத்தில் காணலாம். (படம்: எம். நியூட்டன்)

பிரதேச சபை, செயலகங்களிடம் வேண்டுகோள்

(எம். நியூட்டன்)

வலி. தென்மேற்கு பிரதேசத்திலுள்ள புலிகள் பயன்படுத்திய ஆதனங்களை இராணுவத்தினர் நிலச் சுவீகரிப்பு திட்டத்தின் கீழ் அபகரிக்கும் நோக்குடன் பிரதேச சபை, பிரதேச செயலகங்களில் அனுமதியைக் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வலி. தென்மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் தற்போது இராணுவ முகாம்களாக உள்ள (08 ஆம் பக்கம் பார்க்க)

யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு எந்த ஒரு நட்ட ஈடும் கிடைக்கவில்லை

நிர்க்கதியாக்கப்பட்ட மக்கள் கவலை

(கிளிநொச்சி நிருபர்)

வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் கடுமையான பாதிப்பை எதிர்கொண்டு நஷ்டஈடு பெற விண்ணப்பித்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு இதுவரை எவ்வித நஷ்டஈட்டுக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லையென நஷ்டஈட்டிற்கு விண்ணப்பித்தவர்கள் விசனம் வெளியிடுகின்றனர். குறிப்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த வர்களுக்கு இந்த நஷ்டஈட்டுக் கொடுப்பனவு (08 ஆம் பக்கம் பார்க்க)

பிரதேச சபையின் காணியை கடற்படையினர் அபகரிக்கின்றனர்

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம்.

காக்கைதீவு இறங்கு துறையில் கூறுவிலை மண்டபத்திற்கு அருகாமையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்காக பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்ட (08 ஆம் பக்கம் பார்க்க)

சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றுக்கு வரவேண்டும்

தர்சிகா வழக்கில் ஊர்காவற்றுறை நீதிமன்றம்

(எம். நியூட்டன்)

வேலணை, வைத்தியசாலையில் இருந்தபோது மருத்துவத்தாதி சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கொழும்பு சட்டவைத்திய அதிகாரியை நீதிமன்றில் ஆஜராகுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (08 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். - கொழும்பு தனியார் பஸ் விபத்து

யாழிலிருந்து, கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து ஒன்று நேற்று அதிகாலை பளை பகுதியில் விபத்துக்குள்ளாகியது. அதிகாலை 2 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட குறித்த தனியார் பேருந்து பளை, (08 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா வேப்பங்குளம்

கிணறொன்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

வவுனியா,வேப்பங்குளம் பகுதியில் உள்ள நகர சபைக்குச் சொந்தமான திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தில் உள்ள கிணற்றிலிருந்து ஆணின் சடலமொன்றினை வவுனியா பொலிஸார் நேற்று (08 ஆம் பக்கம் பார்க்க)

இ.போ. சபையினால்

யாழ்.-கொழும்பு குளிரூட்டப்பட்ட பஸ்சேவை

(எம். நியூட்டன்)

இலங்கை போக்குவரத்துச் சபையால் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு குளிரூட்டப்பட்ட பேருந்து சேவையானது வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்து (08 ஆம் பக்கம் பார்க்க)

யாழிலுள்ள டிப்ளோமா பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனம் வழங்க வேண்டும்

மாவை சேனாதிராஜா ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உயர் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கும் பயிலுநர் நியமனங்கள் வழங்கப்படவேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தமிழத் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை எஸ். சேனாதிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார். இவ்வேண்டுகோள் அடங்கிய மகஜர் ஒன்றினை நேற்று மாவை சேனாதிராஜா ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தார். அதில் யாழ். மாவட்டத்திலுள்ள (08 ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியில் 14 வயது சிறுமி சிறிய தந்தையால் துஷ்பிரயோகம்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பளை - நாகராமர் கோவில் பகுதியில் 14 வயதுச் சிறுமி ஒருவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி தனது சிறிய தந்தையால் அதாவது, தாயின் இரண்டாவது கணவரால் இவ்வாறு துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் (08 ஆம் பக்கம் பார்க்க)

நாளை அடையாள உண்ணாவிரதம்

(றொக்ஷன்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்கள் பாதிக்கப்படக்கூடாது என வலியுறுத்தி நாளை வியாழக்கிழமை அடையாள உண்ணாவிரதப் போராட்டமொன்றினை மேற்கொள்ளவுள்ளதாக நோயாளர் உரிமைக்கான சங்கத்தினர் (08 ஆம் பக்கம் பார்க்க)

படுகொலை செய்யப்பட்ட தொண்டர் நிறுவன ஊழியர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு பிரான்ஸ் அழுத்தம்

மூதூரில் கடந்த 2006ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட தொண்டர் நிறுவன ஊழியர்கள் 17 பேரின் குடும்பங்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்பட (08 ஆம் பக்கம் பார்க்க)

கடற்படை உயர் அதிகாரியின் அரசியல் தஞ்ச கோரிக்கை கனடாவினால் நிராகரிப்பு

போர்க் குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தார் என்ற அடிப்படையில் கனடாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கை கடற்படை உயர் அதிகாரி ஒருவரின் அரசியல் தஞ்சக் கோரிக்கையை கனேடிய அதிகாரிகள் நிராகரித்துள்ளனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

சிங்கத்துடன் விளையாடப் போன நரியின் கதைதான் இலங்கையின் நிலை

- சிறிதுங்க ஜயசூரிய கூறுகிறார்

சிங்கத்துடன் விளையாடப் போய் தனது உயிரை நரி பறிகொடுத்த கதை போலத்தான் இந்தியாவுடன் இலங்கை விளையாடி வருவது நல்லதல்ல. இந்தியாவின் பிடிக்குள் இலங்கை அரசு வெகு விரைவில் சிக்கப் போகின்றது என்று ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய எச்சரிக்கை விடுத்துள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க)

கல்வி அமைச்சின் நியமனக்கடிதத்தினை ஏற்க முடியாது நானே வேம்படி மகளிர் கல்லூரிக்கு தற்பொழுதும் அதிபர்

யாழ்.மாநகரசபை முதல்வரின் அழைப்பில் கொள்கை விளக்க ஊடக மாநாட்டில் ராஜீவ் முத்துக்குமார் தெரிவிப்பு

(றொக்ஷன், நாவலந்துறை)

வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபர் நானே என தெரிவித்துள்ள ராஜீவி முத்துக்குமார், இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் அதிகார துஷ்பிரயோகத்தினை தடுத்தமையினாலேயே எனது அதிபர் பதவியை பறிப்பதற்கான செயற்பாடுகளில் பழைய மாணவர் சங்கத்தினர் ஈடுபடுவதாகவும் தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபையின் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் (08 ஆம் பக்கம் பார்க்க)

அபிவிருத்தி நடவடிக்கைகளில் முன்னாள் புலிப்போராளிகள்

மாதம் 18ஆயிரம் சம்பளம் வழங்கவும் திட்டம்

வடக்கு, கிழக்கில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் 5,000 பேரை குடிமக்கள் பாதுகாப்புத் திணைக்களத்தில் சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதில் சேர்க்கப்படுபவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விவசாய மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

முதற்கட்டமாக, 1,500 முன்னாள் போராளிகள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் , வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து அண்மையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வடக்கில் அபிவிருத்தி மற்றும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 3,000 ஏக்கரில் பாரிய விவசாயப் பண்ணைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அங்கு 1,500 முன்னாள் போராளிகளும் பணியில் அமர்த்தப்படுவர் என்றும் குடிமக்கள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியல் அட்மிரல் ஆனந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

'இவர்களுக்கு சம்பளத் திட்டத்துக்கமைய ஊதியம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு குறைந்த பட்சம் 18 ஆயிரம் ரூபா ஊதியம் வழங்கப்படுவதுடன் சீருடை உள்ளிட்ட ஏனைய அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

குடிமக்கள் பாதுகாப்புத் திணைக்களத்தில் இணைந்துகொள்ள விரும்பும் முன்னாள் போராளிகளுக்கு அவர்களின் வதிவிடத்துக்கு அண்மையிலேயே பணியாற்றும் வாய்ப்பும் வழங்கப்படும்.

இது வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வாக அமையும். விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியே இது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் குடிமக்கள் பாதுகாப்புப் படையினர் ஆயுதக் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இலங்கைக்கு கைகொடுப்பதில் சீனாவை பின் தள்ளியது இந்தியா!

இலங்கைக்கு வெளிநாட்டு நிதியுதவிகளை வழங்குவதில் கடந்த ஆண்டில் முன்னிலை வகித்த சீனாவை பின் தள்ளிவிட்டு, இந்தியா அந்த இடத்தைக் கைப்பற்றியுள்ளது.

2012ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களிலும் இலங்கைக்கு மொத்தம் 1,015 மில்லியன் டொலர் வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைத்துள்ளதாக இலங்கையின் அதிகார பூர்வ புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இந்த ஆண்டில் இந்தியா மட்டும் 740.8 மில்லியன் டொலரை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதில் 275.1 மில்லியன் டொலர் நன்கொடையாகும்.

இலங்கையின் அண்மைய வரலாற்றில் வழக்கத்துக்கு மாறாக கிடைத்துள்ள மிகப் பெரிய நன்கொடை இதுவாகும்.

இதன் மூலம் வடக்கு, கிழக்கு, மலையகத்தில் 49,000 வீடுகள் கட்டப்படவுள்ளன.

ஜப்பான் 12.6 மில்லியன் டொலர் நன்கொடை உள்ளிட்ட 175.3 மில்லியன் டொலர் நிதியுதவியை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

மூன்றாவது இடத்தில் நெதர்லாந்து உள்ளது. இந்நாடு 102.5 மில்லியன் டொலரை நிதியுதவியாக அளித்துள்ளது.

கடந்த ஆண்டில் முதலிடத்தில் இருந்த சீனா இம்முறை நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. சீனா இந்த ஆண்டில் 32.5 மில்லியன் டொலரையே இலங்கைக்கு வழங்கியுள்ளது.

ஜெனீவா மீளாய்வை வைத்து இலங்கையை மிரட்டுகிறது இந்தியா

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள இலங்கை பற்றிய மீளாய்வின் போது தமது நிலைப்பாடு எவ்வாறு இருக்கும் என்பது இலங்கை எடுக்கும் நடவடிக்கைகளைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும் என்று இலங்கை அரசுக்கு இந்தியா தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது.

மனித உரிமைகள் நிலைமையை மேம்படுத்துவதைப் பொறுத்தே, இந்தியாவின் நிலைப்பாடு முற்றிலுமாக தீர்மானிக்கப்படும் என்று கடந்த வாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த போது இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் எடுத்துக் கூறியுள்ளார்.

இன நல்லிணக்க விவகாரங்கள், தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு போன்ற விவகாரங்களுக்கு இலங்கை பதிலளிக்க வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவின் கண்மூடித்தனமான ஆதரவை எதிர்பார்க்கக்கூடாது என்றும் இந்தியத் தரப்பில் எடுத்துக் கூறப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் வரும் நவம்பர் மாதம் இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்த மீளாய்வு கடுமையான சூழலிலேயே இடம்பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்தியா, ஸ்பெயின், பெனின் ஆகிய நாடுகள் இந்த மீளாய்வுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அங்கப் பிரதட்சணை செய்தவர் நெஞ்சுவலியால் மரணம்

-வடமராட்சியில் சம்பவம்

தேர்த்திருவிழாவில் அங்கப் பிரதட்சணை செய்த அடியார் ஒருவர் மாரடைப்பு ஏற்பட்டு மரணமாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் துன்னாலை வெல்லிக்கம் தோட்ட பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் துன்னாலை வடக்கைச் சேர்ந்த 60 வயதான ஸ்ரீனிவாசன் சுந்தரலிங்கம் என்ற வயோதிபரே மரணமானவராவார். ஆலயத்தைச் சுற்றி வந்து நேர்த்திக் கடன் செலுத்தும்போது இவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது. இதனைப் பொருட்படுத்தாது இவர் நேர்த்திக்கடனைச் செலுத்திய பின்னர் அங்குள்ள மண்டபமொன்றில் அமர்ந்திருந்த போது மயங்கி சரிந்துள்ளார்.

இதன் பின்னர் இவரை சிகிச்சைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு சென்று அனுமதித்துள்ளனர். ஆயினும், இவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அகதிகளை நாடு கடத்தும் தீர்மானத்தை ஒத்திவைக்க ஐ.நா. அகதிகள் ஆணையகம் கோரிக்கை

இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளவர்களை நாடு கடத்தும் தீர்மானத்தை ஒத்திவைக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஆணையகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவர்களுக்கு மேலும் சில காலம் அவகாசம் வழங்குமாறு, அகதிகள் ஆணையகத்தினால் வெளியுறவுகள் துறை அமைச்சிற்கு கோரிக்கைக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும், வெளியுறவுகள் துறை அமைச்சு இது தொடர்பில் இன்னும் பதில் எதனையும் வழங்கவில்லை.

இது தொடர்பில் இன்னும் தீர்மானம் எதனையும் மேற்கொள்ளவில்லை என வெளியுறவுகள் துறை அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் விசா காலம் நிறைவடைந்த பின்னர் இலங்கையில் தங்கியுள்ளவர்கள் குறித்து இலங்கை குடியுரிமைத் திணைக்களம் கண்டனம் வெளியிட்டுள்ளது. அவர்களில் சிலர் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிர்ச்சித் தகவல்

சித்தப்பா முறையான 16 வயது சிறுவன்

பல தடவை சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளான்

ஆறு வயது சிறுமியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று கடந்த சனிக்கிழமை இரவு கொழும்பு கிருலப்பனை பகுதியில் இடம் பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் கிருலப்பனை இராமகிருஷ்ணா வித்தியாலயத்தில் முதலாம் ஆண்டில் கல்வியயிலும் கிருஷ்ணகுமார் துஷாந்தினி (வயது 6) என்ற சிறுமியே படு பாதகமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

வெள்ளவத்தை, சித்தார்த்த வீதி, புனித அந்தோனியார் தேவாலயத்தின் திருச்சொரூப பவனியில் கலந்து கொண்டு விட்டு தாயாருடன் உறவினர் ஒருவரது வீட்டிற்குச் சென்ற வேளையிலேயே, இந்தச் சிறுமிக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த பதபாதகச் செயலுடன் தொடர்புடைய 16 வயதுடைய அந்தச் சிறுமியின் உறவினரான சிறுவன் ஒருவனையும் 18 வயதுடைய இளைஞன் ஒருவனையும் பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் இருவரும் சிறுமியை அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய பின்னர் கால்வாயில் தள்ளி கொலை செய்துள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்தது. அதனடிப்படையில் கடந்த ஞாயிற்று அதிகாலை கிருலப்பனை பகுதியிலுள்ள கால்வாயில் சிறுமியின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டதுடன் அன்றைய தினம் குறித்த சடலம் மீட்கப் பட்டது.

கிருலப்பனை, கூம்பிக்கள பகுதியில் கிருஷ்ணகுமாரின் குடும்பம் வசித்துவருகின்றது. இவருக்கு 11 வயதில் ஒரு மகனும், 6 வயதில் ஒருமகளும் உள்ளனர். வெள்ளவத்தை, சித்தார்த்த வீதி, புனித அந்தோனியார் தேவஸ்தானத்தின் திருச்சொரூப பவனி கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இதில் கலந்து கொள்வதற்காக குறித்த சிறுமி தாயாருடன் சென்றுள்ளார். அந்தோனியார் தேவாலயத்தின் திருச்சொரூப பவனி நிறைவடைந்ததும் வீடு செல்லும் வழியில் சித்தார்த்த வீதியிலுள்ள உறவினர் ஒருவரது வீட்டுக்கு தாயார் தனது ஆறு வயது மகனையும் 11 வயது மகனையும் அழைத்துச் சென்றுள்ளார்.

இந்த உறவினர் வீட்டில் இவர்கள் உணவு அருந்திக் கொண்டிருந்தபோது சிறுமி திடீரென காணாமல் போயுள்ளார். உடனே பதற்றமடைந்த தாயார் மற்றும் உறவினர்கள் அப் பகுதியில் அச்சிறுமியை தேடியபோதும் சிறுமியைக் காணவில்லை. இதனையடுத்து கிருலப்பனை பொலிஸ் நிலையத்தில் தாயாரும் உறவினர்களும் முறைப்பாடு செய்துள்ளனர். முறைப்பாட்டை அடுத்து விசாரணையினை மேற்கொண்ட பொலிஸார் உறவினரான 16 வயதுச் சிறுவனை கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர்.

அந்தச் சிறுவனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் 18 வயதுடைய இளைஞன் ஒருவனும் கைது செய்யப்பட்டார். விசாரணையின்போது சிறுமியை இவர்களே அழைத்துச் சென்றமை தெரியவந்துள்ளது. சிறுமியை அழைத்துச் சென்ற இவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி கொலை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

கடந்த ஞாயிறு அதிகாலை கால்வாயில் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளபோதிலும், திங்கள்னறு நீதிவான் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டதை அடுத்து பொலிஸாரினால் அந்த சடலம் மீட்கப்பட்டது. சடலத்தினை தந்தையாரான கிருஷ்ணகுமார் சிறுமியின் சடலத்தினை அடையாளம் காட்டினார். இதனையடுத்தே

பிரேத பரிசோதனைக்காக சடலம் களுபோவில வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மகளுக்கு ஏற்பட்ட பரிதாபகரமான முடிவு குறித்து சிறுமியின் தாயாரான திருமதி கிருஷ்ணகுமார் கருத்துத் தெரிவிக்கையில் எனது மகளையும் 11 வயது மகனையும் அழைத்துக் கொண்டே அத்தோனியார் திருச்சொரூப பவனியைப் பார்ப்பதற்கு நான் சென்றேன். பவனி முடிந்து சித்தார்த்த வீதியிலுள்ள எனது மாமியார் ஒருவரின் வீட்டிற்கு நாம் சென்றிருந்தோம். அங்கு சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது எனது மகள் காணாமல் போனார்.

வெளியில் எங்காவது சென்றிருப்பார் என்று தேடிப்பார்த்தபோதும் அவளை காணக் கிடைக்கவில்லை. அந்த சமயம் எனது மாமாவின் மகனான 16 வயதுடைய சுரேந்திரன் வெளியிலிருந்து வீட்டுக்குள் வந்தான். அவனிடம் மகள் எங்கே எனக் கேட்டோம். அவனோ எனக்குத் தெரியாது நான் அவளைக் காணவில்லையென பதிலளித்தான்.

எனது மகள் யாருடனும் வெளியில் செல்ல மாட்டாள், மாமாவின் மகன் என்ற படியால் அவனுடன் தான் சென்றிருக்கலாம் எனக் கருதியே நான் அவனிடம் மகள் குறித்து வினவினேன் இதன் பின்னர் பொலிஸார் அவனை விசாரித்ததன் விளைவாக மகளை அவனே வெளியில் அழைத்துச் சென்றதாக தெரியவந்தது. நான் இத்தகைய சம்பவம் ஒன்று நடக்கும் என சிறிதளவும் நினைத்துப் பார்க்கவில்லை என்று கண்ணீர் மல்க தெரிவித்தார்.

25.04.2006ஆம் ஆண்டு பிறந்த கிருஷ்ணகுமார் துஷாந்தினியின் படுகொலை கிருலப்பனை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இவ்விடயம் தொடர்பாக அலசி ஆராய்ந்த போது மேலும் தெரிய வந்தவை,

ஐயோ என்னை விடுங்கள் என்று கதறியழுத சிறுமி துஷாந்தினியை போதையிலிருந்த பாதகர்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி கால்வாயிற்குள் தள்ளிவிட்டு கொலை செய்துள்ளதாக விசாரணையின்மூலம் தெரிய வந்துள்ளது.

பிள்ளை காணாமல் போனவிடயம் அறிந்த பெற்றோர் பதற்றமடைந்து ஊர்மக்களுடன் பிள்ளையை தேடிக்கொண்டிருந்தபோது குறித்த படுபாதக செயலினைப் புரிந்த சந்தேகநபர்களும் நீலிக்கண்ணீர் வடித்து அவர்களுடன் இணைந்து அச்சிறுமியை தேடுவதைப்போல் பாசாங்கு செய்துள்ளனர்.

அதாவது அந்தோனியார் தேவாலயத்தின் திருச்சொரூப பவனி முடிவடைந்ததும் தனது மகளையும் மகனையும் சித்தார்த்த வீதியிலுள்ள தனது மாமியின் வீட்டிற்கு பிள்ளைகளின் தாயான திருமதி கிருஷ்ணகுமார் அழைத்துச் சென்றுள்ளார். அங்கு உணவருந்திக் கொண்டிருந்த வேளையிலேயே, மாமியின் மகனான 16வயது சிறுவன் யாருக்கும் தெரியாமல் துஷாந்தினியை கடத்திச் சென்றுள்ளான்.

குறித்த சிறுவனின் வீட்டிலிருந்து சுமார் அரை கிலோ மீற்றர் தூரத்திலேயே சிறுமி பலியாகி கிடந்த கால்வாய் உள்ளது. அச்சிறுமியை துவிச்சக்கர வண்டியில் ஏற்றிக்கொண்டு சென்று 16 வயதுடைய அச்சிறுமியின் சித்தப்பா அங்கிருந்த தனது நண்பர்கள் இருவருடன் இணைந்து சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியபோது ஐயோ என்னை விடுங்கள் என்று சிறுமி கதறி சத்தமிட்டுள்ளார்.

சிறுமியின் கதறல் சத்தம் கேட்டதும் கால்வாயின் அக்கரைப் பகுதியிலிருந்த வீட்டார்மின் விளக்கை எரியச் செய்துள்ளனர். திடீரென மின்விளக்கு எரிந்தால் பதற்றமடைந்த சந்தேகநபர்கள் கால்வாயில் தள்ளிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டார் உடனடியாக பொலிஸ் அவசர அழைப்பு பிரிவான 119 இற்கு அழைப்பினை ஏற்படுத்தி குழந்தையின் சத்தம் கேட்டதையும் சிலர் அந்தப் பகுதியிலிருந்து ஓடியதையும் பொலிஸ் அவசர அழைப்பு பிரிவினருக்கு தெரியப்படுத்தியுள்ளனர். அதன் பின்னர் சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் அங்கு எவரும் இல்லாமையினால் குறித்த வீட்டாரிடம் விசாரித்து விட்டு சென்றுள்ளனர்.

இப்படி இந்த சம்பவம் ஒரு புறமிருக்க காணாமல்போன பிள்ளையை சித்தார்த்த வீதி பகுதியெங்கும் தேடி கிடைக்காமையினால் பெற்றோர் கிருலப்பனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இந்த முறைப்பாட்டையடுத்து அதற்கு முன்னர் நாரஹேன்பிட்டி பகுதியிலிருந்து பொலிஸ் அவசர அழைப்பு பிரிவுக்கு வந்த தகவலையும் ஒப்பிட்டுப்பார்த்த பொலிஸார் ஏதோ அசம்பாவிதம் ஒன்று இடம் பெற்றிருப்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டனர்.

இவ்வாறான தகவல்களை பெற்றுக்கொண்ட பொலிஸார் கடற்படையினரின் உதவியுடன் குறித்த கால்வாயில் தேடுதல் நடத்தியுள்ளனர். அதன்போது அந்த சிறுமி கால்வாயில் சடலமாக கிடப்பதை அதிகாலை கண்டு கொண்டதுடன் சடலத்தையும் மீட்டனர்.

அதனைத் தொடர்ந்து அச்சிறுமியின் சித்தப்பாவான 16 வயது சிறுவனை மேற்கொண்ட விசாரணையின்படி மேலும் இரு இளைஞர்களையும் கைது செய்தனர். அத்தோடு சிறுமியின் சடலத்தையும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அச்சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதை ஊர்ஜிதப்படுத்தினர்

இந்த சிறுமியின் சித்தப்பாவான 16 வயது பாதகன் பல தடவை இச்சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளமையும் தற்போது தெரியவந்துள்ளது.

சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குறித்த சந்தேக நபர்கள் கால்வாயின் அக்கரைப்பகுதியில் இருந்த வீடொன்றில் திடீரென மின் விளக்கை எரியச்செய்ததும் பதற்றமடைந்து கால்வாயில் சிறுமியை தள்ளி விட்டுள்ளனர் அதன்போது அச்சிறுமி நீரில் மூழ்கி மூச்சுத்திணறியே பலியாகியுள்ளதாகவும் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டு ள்ளது.

எம். நேசமணி

மகோற்சவ விஞ்ஞாபனம் -2012

யாழ். அரியாலை பரப்பங்குளம் மகாமாரி அம்மன்கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 09 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அதற்கு முதல்நாள் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாந்தியும் பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பமாகும் இவ் உற்சவமானது 9ஆம் திகதி காலை 6.15 முதல் 10 மணிவரை உதய பூஜை, அபிஷேகப் பூஜை, வசந்த மண்டபப் பூஜையுடன் கொடியேற்றம் என்பன இயம் பெறவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள இம் மஹோற்சவ விழாவானது 24.07.2012 அன்று பிராயச்சித்த அபிஷேகம், தீபாராதனை, ஆடிச் செவ்வாய் அபிஷேகம் வைரவர் சுவாமி அபிஷேகம் என்பவற்றுடன் நிறைவுபெறும்.

உற்சவகாலத்திற்குத் தேவையான பால், தயிர், இளநீர், பூ, பூவிலை, சமித்துவகை என்பவற்றை கொடுத்து உதவுமாறு பக்தர்களைக் கேட்டுக்கொள்கின்ற நிர்வாக சபையினர் தீர்த்தத் திருவிழாவன்று மகேஸ்வர பூஜை அடியார்களின் ஆதரவில் நடைபெறும் என்பதனையும் அறியத்தருகின்றனர்.

யாழ் ஓசை இன்றைய மலர் 04.07.2012

நந்தன வருடம் ஆனி 20ஆம் நாள் புதன்கிழமை

நட்சத்திரம்	:	பூராடம் பி.ப. 3.58 வரை பின் உத்தராடம்
சிராத்த திதி	:	அபர பிரதமை
ராகுகாலம்	:	11.57 - 01.27 வரை
சுபநேரம்	:	4.27 - 5.57 வரை
மேடம்	:	மகக்கிலேசம்
இடபம்	:	உயர்வு
மிதுனம்	:	விரயம்
கடகம்	:	அலைச்சல்
சிம்மம்	:	காரியசித்தி
கன்னி	:	சஞ்சலம்
துலாம்	:	உயர்வு
விருச்சிகம்	:	சோர்வு
தனுசு	:	வெற்றி
மகரம்	:	மகுத்துவம்
கும்பம்	:	அலைச்சல்
மீனம்	:	அனுகூலம்

- ராம்தேவா குருக்கள்

கிளிநொச்சி, பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனங்களை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் வழங்குவதையும், பட்டதாரிகளின் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள் : கிளிநொச்சி நிருபர்)

பட்டதாரிகளின் அர்ப்பணிப்பான சேவையே கிளி.மாவட்டத்திற்கு தேவையாகவுள்ளது

ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்

(கரைச்சி நிருபர்)

பாதிக்கப்பட்ட மக்களை குறித்து குரல் எழுப்பிய பட்டதாரிகளுக்கு சேவையாற்றும் வாய்ப்பைத் தந்துள்ளோம். எனவே யுத்தத்தின் பாதிப்புகளை எதிர் கொண்ட மாவட்டங்களில் ஒன்றான கிளிநொச்சி மாவட்டம் பட்டதாரி பயிலுநர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையை எதிர்பார்க்கிறது என ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை கிளிநொச்சி அரச செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்ற காலங்களில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலன்கள் குறித்து குரல் எழுப்பிய பட்டதாரிகளுக்கு இன்று அந்த மக்களுக்கே சேவையாற்றுவதற்கான வாய்ப்பைத் தந்துள்ளோம்.

எனவே, இது உங்களின் மாவட்டம். அந்த மாவட்டத்திற்கு அர்ப்பணிப்புடனும் கடமையுணர்வுடனும் சேவையாற்ற வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்திலும் பட்டப்படிப்பை முடித்து வெளிவருகின்றவர்களுக்கும் இந்த மாவட்டத்தில் வேலை வாய்ப்பு காத்திருக்கிறது. கிளிநொச்சி மாவட்டத்திற்கு 330 பட்டதாரிகள் தேவையாகவுள்ள நிலையில் 114 பட்டதாரிகளுக்கே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் தங்கள் கடமைகளை மேற்கொள்வார்கள் எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் - ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் ஸ்ரீனிவாசன், திட்டப் பணிப்பாளர்கள், உதவி அரச அதிபர்கள், பட்டதாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவியை துன்புறுத்திய இளைஞனுக்கு இரண்டு கிழமைகள் விளக்கமறியலில்

உடுவில், சுன்னாகம் பகுதியில் பாடசாலை சென்ற சிறுமி மீது பாலியல் வன்முறை நடவடிக்கையில் ஈடுபட முயன்றதாகக் கூறி சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட இளம் குடும்பஸ்தரை இரண்டு வார காலத்திற்கு தடுப்புக்காவலில் வைக்குமாறு மல்லாகம் நிதிமன்றினால் கட்டளையிடப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸாரிடம் கிராம அலுவலர் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவினர் குறிப்பிட்ட இளைஞரைப் பிடித்து ஒப்படைத்தாகள். சுன்னாகம் பொலிஸார் குறிப்பிட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்த பொழுது சந்தேக நபரை தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பாடசாலை சென்ற சிறுமியை ஏமாற்றி ஆட்டோவில் ஏற்றிச் சென்று பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியதாக பொலிஸ் நிலையத்தில் ஒரு இளைஞனை கிராம சேவையாளரும் சிவில் பாதுகாப்புக் குழுவினரும் ஒப்படைத்திருந்தனர்.

குறித்த சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாகக் கூறப்படும் இளைஞனை சிவில் பாதுகாப்புக் குழுவினர் பொலிஸாரிடம் ஒப்படைக்கும்போது அதனை எதிர்த்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக ஒன்று கூடிய இளைஞனின் ஆதரவாளர்களுக்கு பொலிஸார் தாக்குதல் நடத்தி அவ்விடத்திலிருந்து அகலுமாறு பணித்திருந்தனர். இந்த நிலையிலேயே, மேற்படி சந்தேக நபரை இரண்டு கிழமைகளுக்கு தடுப்புக்காவலில் வைக்குமாறு நீதிமன்றம் பணித்துள்ளது.

குறித்த சிறுமி பாடசாலைக்குச் சென்ற போது ஆட்டோவில் ஏற்றிச் செல்வதாக ஆசை காட்டி, கவர்ந்து சென்று, ஆள் நடமாட்டமில்லாத பகுதியில் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக இந்த இளைஞன் மீது பொலிஸார் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

நீதிமன்றத்தால் அபராதம்

சுண்டுக்குளி, நுளம்பு பெருகும் வகையிலும் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டு போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த இருவருக்கு 8 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கே.கே.எஸ். வீதி, யாழ்.நகரப் பகுதியில் நுளம்பு பெருகும் வகையில் கடையில் பிளாஸ்ரிக் போத்தல்கள், தகர வெற்றுப் போத்தல்கள் வைத்திருந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமும் பிளாஸ்ரிக் பொருட்கள் விற்பனை செய்த நபருக்கு 8 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

யாழ்.பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது நேற்றுமுன்தினம் இரு நபர்களும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் அபராதத்தைச் செலுத்த உத்தரவிட்டார்.

வங்கி வட்டி வீதம் அதிகரித்துள்ளபோதும் பிரதேச சபைகளுக்கு கிடைப்பதில்லை

சுட்டிக்காட்டுகின்றனர் மக்கள்

உடுவில்,

யாழ். குடாநாட்டு வங்கிகள் சிலவற்றில் வட்டி வீதம் அதிகரித்துள்ள போதிலும் அதனை உரிய முறையில் பிரதேச சபைகள் இனங் கண்டு பயன்படுத்தத் தவறுவதினால் பல இலட்சம் ரூபா வருடாந்தம் இழக்கும் நிலைமை காணப்படுவதாக வரியிறுப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதேச சபைகளின் புதிய தவிசாளர்கள் இந்த வங்கிகளில் வைப்புகள் சம்பந்தமாக உரிய பிரதேச சபைகளின் செயலாளர்கள், கணக்காளர்களுடன் தொடர்பு கொண்டு அது சம்பந்தமான விபரங்களை பெறாமையினாலும் அந்த விடயத்தையிட்டு கருத்தில் கொள்ளாமையாலும் இத்தகைய தூர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய வருவாயைக் கூட இழந்து வருகின்றார்கள். கடந்த காலத்தில் பிரதேச சபைகளின் அதிகாரிகள் தமக்கு பிடித்தமான வங்கிகளில் பணத்தை வைப்பிலிட்டதுடன் தொடர்ந்தும் வங்கிகளின் வட்டி வீதத்தை பார்வையிட்டு நிலைமையை சபைக்குத் தெரிவிப்பதில்லை. இதனால் பிரதேச சபைகள் உழைக்கவேண்டிய இலாபத்தை உழைக்க முடியவில்லை.

இதனால் வருடாந்தம் ஒரு தொகையை இலாபமாகப் பெற்று மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் இருந்தும் அதனை ஈடுசெய்யாமையை யிட்டு பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

முகமாலை, எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்ட ஆயுதங்களை படங்களில் காணலாம்.
(படங்கள்- கரைச்சி நிருபர்)

கண்ணி வெடிகளை அகற்ற அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்

பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன்

(யாழ். மத்தி நிருபர்)

வடக்கில் யாழ்.மாவட்டத்தில் கண்ணி வெடி, அபாய பிரதேசங்கள் அபிவிருத்திக்கும் மீள்குடியேற்றத்திற்கும் தடையாகவுள்ளன.

கண்ணி வெடி அகற்றப்பட வேண்டிய 4 இலட்சத்து 350 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் (இனங்காணப்பட்ட) உள்ள கண்ணி வெடிகளை துரிதமாக அகற்றுவதற்கு உதவ கண்ணி வெடியகற்றலுடன் தொடர்புபட்ட சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டுமென வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார்.

துரித அபிவிருத்திக்கு அரசின் பங்களிப்பு எனும் தலைப்பில் வட்டுக்கோட்டை பிரதேச மக்களுடனான கருத்தமர்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

வடக்கின் அபிவிருத்திக்கு கண்ணி வெடிகளும் தடையாகவுள்ளன. இவ்வாறான கண்ணி வெடிகள் துரித கதியில் அகற்றப்பட்டால் மட்டுமே மீள்குடியேற்றங்கள் பாதுகாப்பானதாக அமையும். இது வரையில் 120 ஆயிரம் தனிநபர் எதிர்ப்பு கண்ணி வெடிகள் அகற்றி அபிவிருத்திக்கு உதவப்பட்டுள்ளன.

வடமாகாண சபை தோ்தலுக்கும் கண்ணி வெடியும் ஒருகாரணமாக தெரிய ப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, கண்ணிவெடியகற்றும் திட்டத்தில் யாழ். செயலகத்தில் பிரத்தியேகமான பிரிவு இயங்குகிறது.

இதனைவிட ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் இச் செயற்பாடுகளில் செயற்படுகின்றன.

எனவே, எமது பிரதேசம் அபிவிருத்தி அடையவும், 30வருட போரின் பின் மக்கள் மீள்குடியமரவும் கண்ணிவெடிகளை துரிதமாக அகற்றுவதற்கு உதவ முன்வரவேண்டும். இன்று வலி.வடக்குப் பிரதேசம் மீள்குடியேற அனுமதிக்கப்படுகிறது. துரித அபிவிருத்தியும் இடம்பெறுகிறது. தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அப்பகுதி மக்களுக்கு பெரும் சேவையாற்றுகிறது.

எனினும், 27.07.2011 இல் புற்றுநோய் பிரிவுக்கு அடிக்கல் நாட்டப்பட்ட பிரதேசத்தில் இதுவரை உட்கட்டுமானப் பணி ஆரம்பமாகவில்லை.

மேலும் அங்குள்ள முருகன் ஆலயமும் மீள்புனரமைப்பு இன்றி அழிவடைந்த நிலையிலுள்ளது.

இவ்வாறாக போரில் அழிவடைந்த பிரதேசங்கள் அபிவிருத்தி அடையவும் மக்கள் மீளக்குடியமரவும் இத்திட்டத்திற்கு சகலரது பங்களிப்பு மிகத் தேவையாகும்.

எனவே, துரித அபிவிருத்திக்கும் மீட்சிக்கும் கைகொடுத்து வடக்கில் யாழ்.மாவட்டத்தை மீட்டெடுப்போம் என அவர் தெரிவித்தார்.

குப்பைகளை வீதியில் எரிப்பதால் பிரதேச மக்களுக்கு அசௌகரியம்

யாழ்ப்பாணம்,

மானிப்பாய் வீதிகளில் உள்ள குப்பைகளைக் கூட்டி துப்புரவு செய்யும் வலி. தென்மேற்கு பிரதேச சபை தொழிலாளர்கள் குப்பைகளை அப்புறப்படுத்துவதற்குப் பதிலாக அவ்விடத்திலே வைத்து தீ மூட்டுகிறார்கள். இதனால் வீதியால் செல்லும் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் நகர்ப் பகுதியிலுள்ள பிரதான வீதி உட்பட குறுக்கு வீதிகளை வாரம் ஒரு முறை கூட்டித்துப்புரவு செய்வதில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதான வீதியில் குப்பைகள் தள்ளுவண்டியில் ஏற்றப்பட்டு அப்புறப்படுத்தப்படுகின்றன. குறுக்கு வீதிகளில் கூட்டப்படும் குப்பைகள் வண்டிகளில் ஏற்றுவதற்குப் பதிலாக அவ்விடங்களில் வைத்தே எரிக்கப்படுகின்றன.

தொழிலாளர்களின் இச்செயலால் வீதியில் நடமாடும் மக்கள் வீண் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். இந்த நிலை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இன்று பரிசளிப்பு விழா

தெல்லிப்பழை,

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் 2012 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா இன்று 4ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு வி.எஸ். துரைராஜா திறந்த வெளியரங்கில் கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், சிறப்பு விருந்தினராக கொழும்பு தியக் கலாநிதி ஏ.இராமநாதன், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

YARL OSAI யாழ் ஓசை

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் நம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිෂන් සභාව
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் : 011-5335500
மின்னஞ்சல் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

YARL OSAI
யாழ் ஓசை
ஒவ்வொரு வாரமும் ஒரு செய்தி
பதிப்பு: 01 தாமரை: 50 புதன்கிழமை 04.07.2012 விலை: 15ரூபா

2012 ஜூலை 04 ஆம் திகதி புதன்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

இன்றைய சிந்தனை

பொய்த் தோற்றங்களால் கவரப்படும் மனம் நல்ல விஷயங்களில் சுவை காணாது...

- ஹொரேஸ்

நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அரசின் நடவடிக்கை அவசியம்

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற 2,039 பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதங்கள் திங்களன்று வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஜூன் மாதம் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியோரில் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றவர்களுக்கே இந் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் படித்து பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதில்லையெனவும் இதனால் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் மிகுந்த விரக்திக்கு உள்ளாகியுள்ளதாகவும் தொடர்ச்சியாகக் கூறப்பட்டு வந்தது. வடக்கில் கடந்த மூன்று தசாப்த காலமாக நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கல் இடம் பெறாத நிலைமையே இருந்து வந்தது. இதனால் படித்து பட்டம் பெற்ற இளைஞர்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத விரக்திக்கு ஆளானார்கள்.

அந்த வகையில், யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நியமனம் வழங்கல்கள் இடம்பெற்று வருவது வரவேற்கத்தக்கதாகும். இதன் மூலம் இளைஞர்களின் விரக்தியைப்போக்குவதுடன் அவர்கள் வேறு சிந்தனைகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தாது நாட்டின் அபிவிருத்தியிலும் சேவையிலும் தங்கள் முழுமையான கவனத்தைச் செலுத்தக்கூடியதாக இருக்கும்.

இதேவேளை, யாழ். மாவட்ட பட்டதாரி பயிலுநர்கள் ஆட்சேர்ப்பில் யாழ். உயர் தொழில்நுட்ப பட்டதாரிகள் உள்வாங்கப்படாததைக் கண்டித்து யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. தென்மாகாணத்தில் உயர் தொழில்நுட்பக் கல்லூரி பட்டதாரிகள் - பட்டதாரி பயிலுநர்களாக உள்வாங்கப்பட்ட போதிலும், யாழ். மாவட்ட உயர்தொழில் நுட்பக் கல்லூரி பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லையென்ற கோரிக்கையை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது. 2004 ஆம் ஆண்டு 47 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்கப்பட்ட போதும், எமக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை. இந்நிலையில் ஆயிரக் கணக்கான பட்டதாரி மாணவர்கள் வேலை வாய்ப்பின்றி மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே எமக்கு சாத்தியமான அளவு விரைவாக அரச வேலைவாய்புகள் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடபகுதியைப் பொறுத்தமட்டில் பாரிய அளவிலான தனியார் நிறுவனங்களோ, தொழிற்சாலைகளோ இல்லாதிருப்பது படித்த இளைஞர்கள், அரச தொழில் வாய்ப்பை மாத்திரம் எதிர்பார்த்து காத்திருப்பதற்கான பிரதான காரணம். இலங்கையைப் பொறுத்தமட்டில் 60 சதவீதமானோர் தனியார் துறைகளில் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இவையாவும் வடக்கு-கிழக்கு தவிர்ந்த பிரதேசங்களிலேயே அமைந்துள்ளன.

கடந்த காலங்களில் நிலவிய கொடிய யுத்தம் காரணமாக தனியார் நிறுவனங்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு செல்ல முயற்சிக்காத அதேவேளை, தொழிற்சாலைகளும் அமைக்கப்படவில்லை. இருந்த ஓரிரு தொழிற்சாலைகளும் தமது நடவடிக்கைகளை மூடிவிட்டு தென்பகுதிக்கு திரும்பிவிட்டன. இந்த நிலையில் வடகிழக்கில் வேலைவாய்ப்பு இல்லாது போனதுடன் இளைஞர்களும் மிகுந்த விரக்திக்கு ஆளானார்கள். அந்த வகையில் மாற்று தெரிவு ஒன்று இல்லாத பலர் தம்மை வேறு அமைப்புக்களில் இணைத்துக்கொண்டனர்.

அநேகமான படித்த இளைஞர்கள், ஆயுத கலாசாரத்தில் மோகம் கொண்டமைக்கு பிரதான காரணம் அவர்களுக்கு உரிய தொழில் வாய்ப்பின்மையும், இளைஞர்களின் பிரச்சினைகளை அப்போது பதவியிலிருந்த அரசாங்கங்கள் கணக்கில் எடுக்கத் தவறியமையுமேயாகும். அந்த வகையில் தற்போது நிலைமை முற்றிலும் மாறுபட்ட சூழல் தோன்றியுள்ளது. வடக்கு-கிழக்குப் பிரதேசத்திற்கு தனியார் நிறுவனங்கள் பல நகர்ந்துள்ளன. வேலை வாய்ப்புக்களையும் வழங்கி வருகின்றன.

இருந்த போதிலும் அங்குள்ள இளைஞர்களின் தேவைக்கு போதுமான அளவு வேலைவாய்ப்புகளை வழங்கக் கூடிய நிலையில் குறித்த தனியார் நிறுவனங்கள் இல்லையென்ற யதார்த்தத்தையும் உணர்ந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

எனவே, அரசாங்கம் அதிகளவு வேலை வாய்ப்பு வழங்கக்கூடிய தனியார் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிப்பதுடன் வடபகுதி இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண முன்வரவேண்டும். இதன் மூலமே கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் உட்பட சகல தரப்பினரும் அந்த துயரங்களிலிருந்து விடுபட்டு மீண்டும் புதியதோர் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள கூடியதாக இருக்கும்.

இவை அனைத்திற்கும் மேலாக அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை உருவாகும் வகையில் அமையும் என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

இனப்படுகொலையின் பத்து படிநிலைகளும் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்தவைகளும்

முரண்பாடுகளைத் தீர்த்தல் என்பது முரண்பாடுகளிலிருந்து விலகல் என்று அர்த்தப்படமாட்டாது. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா சுதந்திரம் பெற்றபோது காந்திஜீ இந்தியாவிலிருந்து மத ரீதியாக பாகிஸ்தானை பிரித்துக்கொடுத்தமை இந்து, முஸ்லிம் மத ரீதியிலான நல்லிணக்கத்திற்குப் பாதகமாக அமைந்தது. உண்மையில் இணைந்த நாடாக இருந்திருந்தால் மத ரீதியிலான நல்லிணக்கம் ஏற்பட்டிருக்கும். இதற்கு மறுப்பு கூறுபவர்கள் பல மொழி ரீதியிலான மாநிலங்கள் உள்ளபோது மத ரீதியிலும் இந்தியாவில் மாநிலங்கள் பாகிஸ்தான், பலுகிஸ்தான், வங்காளம் என உருவாகி இருந்திருந்தால் இன்று இந்தியா உலகின் முதல்தர வல்லரசாகி இருக்கும். இதுவே மகாத்மா காந்திஜி, நேருஜி, ஜின்னா விட்ட தவறு.

ஆபத்தான அணு ஆயுதங்களையும் ஏவுகணைகளையும் படை பல அதிகரிப்பினையும் மேற்கொள்ளாது மக்களின் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தி இருக்கலாம். அடுத்து இன்று அமெரிக்க அரசால் உலகின் பயங்கரவாதச் செயலுக்கு ஊக்குவிக்கும் நாடாக நேரடியாக பாகிஸ்தானும் மறைமுகமாக இந்தியாவும் (குறிப்பாக இலங்கையில் ஆயுத கலாசாரத்தினை உருவாக்கியமையில்) கருதப்படும் நிலைமை ஏற்பட்டிருக்காது.

இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு வன்னியில் நிகழ்ந்த இனப்படுகொலைக்கான இரட்டைப் பொறுப்பை (Dual Responsibility for Genocide) இந்தியாவும் இலங்கையும் ஏற்க வேண்டும். இதனை வரலாறு ஒருபோதும் மறுக்காது. இனப்படுகொலை நடைபெறல் 10 படி நிலைகளை உள்ளடக்கியது. அவையாவன-

படி ஒன்று Classification (இனப்படுகொலைக்கு ஆளாகும் இனத்தினை வகையிடல்)

இதன்போது மக்கள் நாங்கள், அவர்கள் என வேறுபட்டு நிற்பர். இங்கு சிங்களவர், தமிழர் என்று வேறுபட்டு நின்றனர். இன்றும் அவ்வாறான அரசியல் சூழ்நிலையே உள்ளது. இது இனப்படுகொலை தொடர எதுவாகும். இனப்பாகுபாடு இல்லாத நிர்வாகம் இதற்குத் தேவை.

படி இரண்டு - Symbolization (இனப்படுகொலை மேற்கொள்வதனை காரணப்படுத்தல்)

இனப்படுகொலை மேற்கொள்பவர்களை வெறுக்கத் தக்கவர்களாக அடையாளப்படுத்தல். இங்கு தமிழ் மக்களை கொடிய பயங்கரவாதிகளாக உருவகப்படுத்தி உள்நாட்டிலும் இந்தியாவிலும் மேற்கு நாடுகளிலும் பிரசாரம் செய்யப்பட்டது. யுத்தம் முடிந்த பின்பும் தமிழ் அதிகாரிகளே தம்முடன் போட்டியிடும் சக அதிகாரிகளை அவர் புலி, இவர் புலி என அடையாளப்படுத்திப் பார்க்கும் நிலையும் மனித நேயத்தைப்பற்றி கதைப்பது பயங்கரவாதம் என அடையாளப்படுத்துவதும் இன்று உள்ளது. இது தவறானது. இத்தகைய செயல்களை பொறுப்புள்ள பதவியில் உள்ளவர்கள் தவிர்க்கவேண்டும். அரசியல்வாதிகளும் இதனைத் தவிர்க்கவேண்டும்.

படி மூன்று Dehumanization (அழிக்கப்படும் மக்களை மனிதர்களாகக் கருதாமை)

அழிக்கப்பட்ட இனத்தினை மனிதர்களாகக் கருதா மை அவர்களை வேண்டத்தகாத ஜந்துக்களாகவே கருதி அழித்தல். குறிப்பாக அழிக்கப்பட்ட தமிழ் மக்கள் அனைவரும் புலிகள் என்ற வாதமும் புலிகள் அனைவருமே பூண்டோடு அழிக்கப்பட்டனர் என்ற வாதமும் இத்தகையது. இத்தகைய இனப்படுகொலைக்குப் பின்பும் புலிகளை பயங்கரவாதிகளாக இலங்கை, இந்தியா, மேற்கு உலகம் தடைசெய்வது தமிழ் மக்களை புலிகளாகத் தடைசெய்து மேலும படுகொலைகளை ஊக்குவிப்பதாகவே அமையும்.

படி நான்கு Organization (அமைப்பாக செயற்பட்டு அழித்தல்)

அமைப்பாக செயற்பட்டு இனப்படுகொலையை மேற்கொள்ளல். உண்மையில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்ந்த இனப்படுகொலை சர்வதேச நாடுகளின் அனுசரணையுடனேயே நடைபெற்றது. (Co chaired Genocide) இதில் இலங்கை அரசும் இலங்கை ஆயுதப் படையும் நேரடியாக தொடர்புபட்டது. இனப்படுகொலைக்குப் பின்பான கொடுக்கல்வாங்கலில் உள்ள பிணக்குகளே ஐ.நா. மனித உரிமை அமர்வின் வெளிப்பாடு. உலக நாடுகள் நினைத்திருந்தால் தமிழின அழிப்பினைத் தடுத்திருக்கலாம். அழிப்பிற்கு பின்பான புனர்வாழ்வினை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக ஏற்படுத்தி இருக்கலாம். இனம் குடும்பத்தினர் விசாரணைகள் இன்றி சிறையில் அடைக்கப்பட்டவர்களாக உள்ளனர். அவர்களை விடுவித்திருக்கலாம். அது வளமான எதிர்காலத்தினை உருவாக்கும். இவை படுகொலையின் தொடர்ச்சியே ஆகும்.

படி ஐந்து Polarization (படுகொலைக்கு ஆளாகும் இனத்தின் முனைவாக்கல்)

படுகொலைக்கு ஆளாகும் இனத்தினை வெறுக்கும் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. இங்கு தமிழர்கள் பயங்கரவாதிகள், அப்பாவி மக்களைக் கொல்பவர்கள். போதைப்பொருள் வியாபாரம் செய்பவர்கள். மனிதக் கடத்தலில் ஈடுபடுபவர்கள் (Human trafficking) என்ற வகையில் பிரசாரம் இலங்கை, இந்தியா, மேற்குலகம் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு பயங்கரவாதத்தினை அடக்குவதற்கான சர்வதேச ஆதரவும் பெறப்பட்டு, அதன் வழியிலேயே இனப்படுகொலை நடைபெற்றது. மேலும் அதே வகையில் மீண்டும் பிரசாரம் மேற்கொள்ளப்படுவது தமிழினப் படுகொலை தொடர்வதற்கு ஏதுவாகும். இதில் தமிழ் மக்களுக்கு உலக நீதி மறுக்கப்பட்டது. இந்நிலைமை இனிமேலும் தொடரக்கூடாது.

> யுத்தத்திற்கு பின்பான புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை, அபிவிருத்தியில் தமிழ் மக்களது வளம் சுரண்டல், மனித உரிமைகளை செயற்படுத்தல் என்பனவற்றில் இன ரீதியான பாகுபாடு காணப்படுகின்றது. இனப் படுகொலைகள் மீளவும் ஏற்படாதிருக்க இவை களையப்படல் வேண்டும்...

படி ஆறு - Preparation (படுகொலையினை திட்டமிடல்)

படுகொலையினை திட்டமிட்டுத் தயாரித்தல் வன்னியிலிருந்து ஐ.நா. தொண்டு நிறுவனங்களை வெளியேற்றியது, மக்களை பாதுகாப்பு வலயம் எனக்கூறி குறித்த இடத்தில் செறிவடையச் செய்து தாக்குதல் நடத்தியமை. இனப்படுகொலை திட்டமிட்டு நடைபெற்றதற்கு ஆதாரம். இதனை ஐ.நா. நிறுவனங்கள் சிந்தித்திருந்தால் தவிர்த்திருக்கலாம்.

படி ஏழு - Extermination (பூண்டோடு அழித்தல்)

மக்கள் நெருக்கமாக வாழ்ந்த இடத்தில் பெருமளவு சுடுகலன் பிரயோகம், பாரிய விமானத்தாக்குதல், கடல் வழித்தாக்குதல், தடை செய்யப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் என்பன நிகழ்ந்துள்ளன. இதற்கு செய்மதிப் படங்களும் இவ்வாயுதங்களை இலங்கை அரசுக்குக் கொடுத்த உலக நாடுகளும் ஆதாரம். இவ்வாறான நிகழ்வுகள் உலகில் இனிமேல் எவ்விடத்திலும் நடைபெறக்கூடாது. இதில் ஐ.நா. செயலாளர் நாயகம் பொறுப்பற்றவராக செயற்பட்டு உள்ளார். ஏனெனில், இனப்படுகொலைக்குப்பின் 3 ஆண்டுகள் கழிந்தும் இதனை விஞ்ஞானத் தடயவியல் ரீதியில் இனப்படுகொலை என வரையறுக்க வில்லை.

படி எட்டு - Denial (படுகொலை நடந்தமையை மறுதலித்தல்)

மறுத்தல் - நவீன விஞ்ஞான தொழில் நுட்ப ஆதாரங்கள் இருந்தும் இலங்கை அரசு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொடர்ச்சியாக மறுத்து வருகின்றது. இதற்கு துணைபோவதாக இந்திய மத்திய அரசும் மிகவும் அநாகரிகமான இராஜதந்திர நகர்வுகளைச் செய்கின்றது. இவ்வாறு செய்யின் மீளவும் தமிழினம் இலங்கையில் அழிக்கப்படும் சாத்தியம் உள்ளது. இதனை நாம் விலத்த சிறந்த அரசியல் சாணக்கியம் தேவை.

படி ஒன்பது Discrimination (படுகொலைக் காளாகிய இனத்தினை பாகுபடுத்தல்)

தமிழ் இனம் மீதான பாகுபாடு இலங்கை துன்புறுத்தல்)

தொடர்ச்சியான துன்புறுத்தல்கள் தமிழர்களின் பாரம்பரிய தாய் நிலம் இராணுவ வலயங்களாகப் பிரிக்கப்பட்டு இராணுவ நிர்வாகத்தினூடாக பொது வாழ்க்கை வாழ மக்கள் உட்பட்டுள்ளனர்.

பிரதேசத்திற்குப் பிரதேசம் இராணுவத்தின் பிரசன்னம் வேறுபட்டுக் காணப்பட்டபோதும் விசாரணைகள், கட்டுப்பாடுகள் என்பன ஜனநாயகத்திற்கு அப்பால் நிகழ்கின்றன. இவை இனப்படுகொலையின் தொடர்ச்சியாகவே நாம் கருதல் வேண்டும்.

இனப் படுகொலையினை பாரிய கொலைகள், மனித குலத்திற்கு எதிரான குற்றம், மனிதனின் மிகவும் கீழ்த்தரமான நடவடிக்கை என பலவாறாக விபரிக்கலாம்.

இலங்கையில் இவை நடைபெற்றதை ஏற்றுக் கொள்ளும் இடம் இன்றும் ஏற்படவில்லை. மாறாக புலிகளால் இறந்த சிங்கள மக்களின் படங்களை பத்திரிகையில் மீளப் பிரசுரித்து தமிழ் மக்களின் கொலையை புலிகளின் அழிவாக நியாயப்படுத்தும் தன்மை காணப்படுகின்றது. இதனை சிங்கள மக்களுக்கும் சிங்கள அரசுக்கும் தவறெனக்கூற வேண்டியது தமிழ் புத்திஜீவிகளின் கடமையாகும்.

குறிப்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், சட்டவாளர் சங்கம், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள், யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபை போன்றவை இன்றுவரை மௌனம் காப்பது மனிதகுல நியதிக்கு தப்பானது. குறிப்பாக யாழ். பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் தொடர்பான மௌனம், சர்வதேச ரீதியில் அரசியல்வாதிகளை மட்டுமல்ல கல்வியியலாளர்களையும் புறக்கணிக்கும் நிலைமை ஏற்படலாம்.

நாம் வன்முறைக் காயத்திலிருந்து துன்பப்படும்போது இதனால் சமூகத்தில் ஏற்பட்ட பாதிப்புகளை மூன்று வகையில் வகைப்படுத்தலாம்.

1. முதலாவது எதிர் விளைவு

மன உளைச்சல்களும் மன அழுத்தமும் உள நோய் நிலைகள் என இவை அமைகின்றன.

2. இரண்டாவது முன்னோக்கிய விளைவு

இதில் துன்பத்திற்குப் பின்பான அபிவிருத்தி, கல்வி நாட்டம், தொழில் வாய்ப்பு, புனர்வாழ்வு என்பன அமைகின்றன. வன்முறைக்குப் பின்பான அபிவிருத்தி இதில் அடங்கும். கிழக்கின் உதயமும் வடக்கின் வசந்தமும் இதில் அடங்கும்.

3. மூன்றாவது வன்முறைக்குப் பின்பான நடுநிலைமைப்போக்கு அல்லது மௌனம் அதாவது வன்முறையின் தாக்கத்தினால் அவர்களின் செயலில் மாற்றம் ஏற்படவில்லை. யாழ். பல்கலைக்கழகம் மற்றும் தமிழ் அரச நிர்வாக அதிகாரிகளில் இந்நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறான மூன்று நிலைகளும் எமது பிரதேசத்தில் தனி நபர் மட்டத்திலும் குடும்ப மட்டத்திலும் சமூக மட்டத்திலும் காணப்படுகின்றது. உலகமயமாதல், இனப்படுகொலையினை தடுக்கத் தவறிவிட்டாலும் படுகொலைக்குப் பின்பான விழிப்பால் செல்வாக்குச் செலுத்துகின்றது. நாடு கடந்த அரசு என்ற கோட்பாடு இதன் அடிப்படையிலேயே உருவாகியுள்ளது. புதிய விடுதலைக்கோட்பாடு (Neoliberal theory) எதிர்வரும் தசாப்தத்தில் நாடு கடந்து வாழும் மக்களிடையே குறிப்பாக சீனா, இந்தியா போன்ற நாட்டுப் பிரஜைகளும் நாடு கடந்த அரசுகளை உருவாக்கும் நிலைமையினை ஏற்படுத்தும். இது உலக மயமாதலின் புதிய அரசியல் பரிணாமமாக அமையும். ■

அவுஸ்திரேலிய-இந்தோனேசிய தலைவர்கள் ஆட்கடத்தல் தொடர்பில் பேச்சுவார்த்தை

அவுஸ்திரேலியாவுக்கு இரு நாள் விஜயத்தை மேற்கொண்டு சென்றுள்ள இந்தோனேசிய ஜனாதிபதி சுஸிலோ பம்பாங் யுதோயொனோ அந்நாட்டுப் பிரதமர் ஜூலியா கில்லார்ட்டை டார்வின் நகரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

புகலிடக் கோரிக்கை, பிராந்திய பாதுகாப்பு மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதாரம் என்பன குறித்து மேற்படி பேச்சுவார்த்தைகளின் போது கவனம் செலுத்தப்பட்டது.

ஆட்கடத்தல் விவகாரம் முக்கிய பிரச்சினையாக உள்ளதாக ஜூலியா கில்லார்ட் குறிப்பிட்டார்.

கடந்த மாதம் அவுஸ்திரேலியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையில் புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றி வந்த இரு படகுகள் மூழ்கியதையடுத்து ஆட்கடத்தல் தொடர்பான கவலை இரு நாடுகளிலும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது அவுஸ்திரேலியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான இரண்டாவது வருடாந்த உயர் மட்ட சந்திப்பாக உள்ளது.

ஆட்கடத்தலை பிசாசுத் தனமான வர்த்தகம் என வர்ணித்துள்ள ஜூலியா கில்லார்ட்டு அது தொடர்பில் இரு நாடுகளும் கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக வலியுறுத்தினார்.

ஈராக்கிய குர்திஷ்டான் அழகுராணி...

வட ஈராக்கிலுள்ள குர்திஷ்டான் பிராந்திய தலைநகர் அர்பிலில் வரலாற்றில் முதல் தடவையாக திங்கட்கிழமை இடம்பெற்ற ஈராக்கிய குர்திஷ்டான் அழகுராணிப் போட்டியில் பங்கேற்று அழகுராணியாக முடிசூட்டிக் கொண்ட ஷின் அலில் அகோவை படத்தில் காணலாம்.

குழந்தை பிறந்து 28 மணிநேரத்தில் பரீட்சை எழுதிய பெண்

கல்வி மீதுள்ள தீவிர பற்று காரணமாக குழந்தையொன்றைப் பிரசவித்து 28 மணி நேரத்தில் தனது பட்டப் படிப்பு இறுதிப் பரீட்சையை எழுதி முதல் வகுப்பில் பெண்ணொருவர் சித்தி பெற்ற சம்பவம் பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வந்த இஸோபெல் கொஹென் (33 வயது) என்ற பெண்ணே தனக்கு புதிதாகப் பிறந்த பெண் குழந்தையான பீற்றைஸ் மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்க, மருத்துவ பிரசவத்தின் போது அணியும் ஆடை மற்றும் சாதாரண சிலிப்பர்கள் சகிதம் சென்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆங்கில பட்டப்படிப்பு பரீட்சையை எழுதியுள்ளார்.

முன்னாள் நடனக் கலைஞரான இஸோபெல், உயர்தரக் கல்வியையடுத்து பட்டப் படிப்பை கைவிட நேர்ந்தது. எனினும், அவர் கல்வி மீது உள்ள பற்றுக் காரணமாக பட்டப் படிப்பை மீளவும் தொடரும் முயற்சியில் ஈடுபட்டார். இஸோபெலின் கணவர் இவான் கம்பெல் கலாநிதி பட்டத்துக்கான கற்கை நெறியை கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சொக்கலேட்டை உண்டால் உயிருக்கு ஆபத்து..

சிறுவர்களது அபிமான தின்பண்டமாக விளங்கும் சொக்கலேட்டானது பிரித்தானியாவைச் சேர்ந்த 5 வயதுச் சிறுமியொருவரைப் பொறுத்தவரை உயிராபத்து விளைவிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது.

லோலா ரெயின் என்ற மேற்படி சிறுமிக்கு ஏற்பட்டுள்ள அரிய ஈரல் மற்றும் சிறுநீரகப் பாதிப்புகள் காரணமாக, சிறிய சொக்கலேட் துண்டை அவர் உள்ளெடுக்கும் பட்சத்தில் அவரது குருதியிலுள்ள பொட்டாஸியத்தின் அளவு அதிகரித்து அவர் மரணத்தைத் தழுவ நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

லோலாவின் சகோதரியான நிகோலியும் (10 வயது) இதையொத்த ஈரல் மற்றும் சிறுநீரகப் பாதிப்புக்கு ஆளாகியிருந்தார். ஆனால், அவர் இரட்டை உறுப்பு மாற்று சிகிச்சையையடுத்து அவரால் தற்போது சொக்கலேட்டை உண்ண முடிகிறது.

லோலா சொக்கலேட்டை காணும்போது அதைத் தருமாறு அடம்பிடித்து அழுவதாக தெரிவித்த அவரின் தாயார் நடாலி (35 வயது), லோலாவுக்கு சிறுநீரக மாற்று சிகிச்சையை மேற்கொள்ள முயற்சிகளை முன்னெடுத்துள்ளதாகக் கூறினார்.

அதிகளவு நேரம் 'பேஸ்புக்' பார்ப்பதால் சிறுமிகளுக்கு மன அழுத்தம்..

சிறுமிக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

புதிய ஆய்வில் தகவல்

பேஸ்புக், டுவிட்டர் மற்றும் மைஸ்பேஸ் போன்ற சமூக இணையத்தளங்களின் முன் அதிகளவு நேரத்தைச் செலவிடும் சிறுமிகள் மனஅழுத்தத்தாலும் தன்னம்பிக்கை குறைவாலும் துன்பப்பட நேர்வதாக புதிய ஆய்வொன்று கூறுகிறது.

12 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட 1,096 சிறுமிகள் மத்தியில் அவுஸ்திரேலிய மிளின்டர்ஸ் பல்கலைக்கழகத்தின் உளவியல் பாடசாலையைச் சேர்ந்த கலாநிதி அமி ஸ்லேட்டர், பேராசிரியர் மரிகா திக்கெமான் ஆகியோரால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஆய்வில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 96 சதவீத சிறுமிகள் தமது வீடுகளில் இணையத்தளங்களை உபயோகிப்பதும், 72 சதவீத சிறுமிகள் தமது புகைப்படங்களை இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்வதும் கண்டறியப்பட்டுள்ளது. தமது மகளிர் இணையத்தளத்தை பார்வையிடுவதை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் 35 சதவீத பெற்றோர் மட்டுமே ஈடுபட்டுள்ளனர். 14 பிரபல இணையத்தளங்களில் செய்யப்பட்டிருந்த 600 இற்குமேற்பட்ட விளம்பரங்கள் சிறுமிகளை இலக்கு வைத்தே வெளியிடப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மனைவி - குழந்தையை பறிகொடுத்தவர் சோகம் தாங்காமல் தூக்கிட்டு தற்கொலை

தாம்பரம்,

மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்ற மனைவி மற்றும் குழந்தையை தன் கண் எதிரிலேயே விபத்தில் பறிகொடுத்தவர், அவர்களை இழந்த சோகம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டார்.

முன்னதாக விபத்தில் உயிரிழந்த மனைவி மற்றும் குழந்தையின் உடல்களை அடக்கம் செய்த அவர், மனைவியின் சேலையைக் கொண்டு தூக்கிட்டு தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.

பெரும் பரிதாபத்தை ஏற்படுத்திய இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

சென்னையைச் சேர்ந்தவர் ராஜேந்திரன். தனியார் பாடசாலையொன்றில் சாரதியாக பணியாற்றி வந்த இவர், நித்தியகல்யாணி என்பவரை கடந்த 1 1/2 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 1 வயதில் வேதஸ்ரீயா என்ற குழந்தை இருந்தது.

இந்நிலையில், கடந்த மாதம் 3 ஆம் திகதி குழந்தை வேதஸ்ரீயாவின் முதல் பிறந்த நாளை கோலாகலமாக கொண்டாடினர். இந்த விழாவில் எடுத்த புகைப்படங்களை தனது மாமியாரிடம் காட்டுவதற்காக மனைவி மற்றும் குழந்தையை அழைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் மறைமலை நகருக்கு சென்றார். அப்போது எதிரே வந்த வேனொன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியது. இதில் 3 பேரும் நிலை தடுமாறி கீழே விழுந்தனர். அவர்கள் சுதாரித்து எழுவதற்குள், வேன் சக்கரத்தில் சிக்கி நித்யகல்யாணியும், வேதஸ்ரீயாவும் ராஜேந்திரன் கண் எதிரிலேயே பலியானார்கள்.

இலேசான காயத்துடன் உயிர்தப்பிய ராஜேந்திரன், கண் இமைக்கும் நேரத்தில் மனைவி மற்றும் குழந்தையை பறிகொடுத்து விட்டோமே எனக் கதறி அழுதார்.

இதனிடையே இரண்டு உடல்களும் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு ராஜேந்திரன் வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டது.

மாலையில் அந்த உடல்கள் அடக்கம் செய்யப்பட்டதையடுத்து மனைவி மற்றும் மகளைப் பிரிந்த சோகத்தில் இருந்த ராஜேந்திரன், நேற்று முன்தினம் தனது வீட்டிலேயே தனது மனைவியின் சேலையைக் கொண்டு தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பல ஆண்டுகள் மௌனமாக இருந்துவிட்டு இப்போது கபட நாடகமாடி வரும் கலாம்

மக்களின் மனதில் பிடித்திருந்த இடத்தையும் இழந்துவிட்டார் என்கிறார் பால் தாக்கரே

மும்பை,

சோனியாவை பிரதமராக்க தான் தயாராக இருந்ததாக, பல ஆண்டுகளுக்குப் பிறகு அப்துல் கலாம் தெரிவித்திருப்பது கபட நாடகமாடும் செயல் என சிவசேனா தலைவர் பால் தாக்கரே கூறியுள்ளார்.

தனது கட்சியின் பத்திரிகையான 'சாம்னா'விலேயே அவர் இதுகுறித்து மேலும் கூறியிருப்பதாவது,

சோனியாவை பிரதமராக்க தான் தயாராக இருந்ததாக, அப்துல் கலாம் தெரிவித்திருப்பதன் மூலம், அவர் நகைப்புக்கு இடமாகியுள்ளார். அதேநேரம் இதனை அவர் பல ஆண்டுகளுக்குப் பின் தெரிவித்திருப்பதன் மூலம் மக்களின் மனதில் அவர் பிடித்திருந்த இடத்தை இழந்து விட்டார். மேலும், மக்களின் பார்வையில் அவரின் செயல் கபட நாடகமுமாகியுள்ளது.

இதுநாள் வரை, சோனியா பிரதமராவதை தடுத்து நிறுத்தியவர் கலாம் தான் என்ற தகவல் மக்கள் மத்தியில் உலாவிக் கொண்டிருந்தது. இதற்காக நாடு அவரை பாராட்டிக் கொண்டிருந்தது. ஜனாதிபதி பதவியிலிருந்து அவர் ஓய்வு பெற்ற பின்னரும், இதற்காக அவரை பலர் புகழ்ந்து கொண்டிருந்தனர். இந்நிலையில், 'சோனியாவை பிரதமராக்க தான் தயாராக இருந்ததாக அவர் இப்போது தெரிவித்திருப்பதை, 10 ஆண்டுகளுக்கு முன்னரே தெரிவித்திருக்க வேண்டும். ஆனால், சுய நலம் காரணமாக அமைதியாக இருந்து விட்டார்.

அப்துல் கலாம், பொக்ரானில் நடத்திய அணுகுண்டு சோதனை கூட நாட்டிற்கு பலன் தரவில்லை. ஆனால், சோனியா பற்றி அவர் சமீபத்தில் வெளியிட்ட தகவல், உலக அளவில் இந்தியாவின் கௌரவத்தை பாழ்படுத்தி விட்டது.

கலாமை மீண்டும் ஜனாதிபதியாக்க வேண்டும் என தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் விரும்பின. அப்படி அவர் அந்த பதவிக்கான வேட்பாளராகி, இந்த தகவலை வெளியிட்டிருந்தால், அது தேசிய ஜனநாயக கூட்டணியை அவமானப்படுத்தும் செயலாகி விடும். எனவே இப்போதைய சம்பவங்களை பார்க்கும் போது, பொக்ராணில் அணுகுண்டு சோதனை நடக்க உண்மையிலேயே கலாம் தான் காரணமா என்ற சந்தேகம் எழுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரமிக்க அமைச்சர்கள் குழுவின் தலைவர் பதவியிலிருந்து பவார் விலகல்

புதுடில்லி,

தொலைத்தொடர்பு துறைக்காக அமைக்கப்பட்ட அதிகாரமிக்க அமைச்சர்கள் குழுவின் தலைவர் பதவியிலிருந்து மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத் பவார் விலகியுள்ளார்.

'2ஜி ஸ்பெக்ட்ரம்' ஒதுக்கீட்டில் ஏற்பட்ட முறைகேடு தொடர்பாக, 22 தொலைத்தொடர்பு நிறுவனங்களின் உரிமங்களை உச்சநீதிமன்றம் சமீபத்தில் இரத்து செய்தது. இதனையடுத்து ஏலம் நடத்தி தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு அலைக்கற்றைகளை ஒதுக்க உச்சநீதிமன்றத்தில் உத்தரவிட்டதன் பேரில், மத்திய அரசும் நடவடிக்கையில் இறங்கியது.

இதற்கென தனியாக, அதிகாரமிக்க அமைச்சர்களின் குழுவை அமைத்தது. இதற்கு முன்னாள் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைவராக நியமிக்கப்பட்டார். இதனிடையே பிரணாப் முகர்ஜி ஐக்கிய முற்போக்குக்கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நிலையில், தலைவர் பதவியிலிருந்து பிரணாப் விலகினார். இதனையடுத்து அக்குழுவின் புதிய தலைவராக மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத்பவாரை மத்திய அரசு நியமித்தது.

இந்நிலையில், இக்குழுவின் முதற் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் இறுதி நேரத்தில் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு வேறொருநாள் அது நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இதனிடையே பிரதமரைச் சந்தித்த அமைச்சர் சரத்பவார், தன்னை இப்பதவியிலிருந்து விடுவிக்குமாறும், தம்மால் திறம்பட இப்பணியை செய்ய முடியுமா என்ற சந்தேகம் இருப்பதாகவும், ஒருவித பயம் தனக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இதற்கு பிரதமரும் ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிகிறது. இதனையடுத்து, அக்குழுவிற்கு விரைவில் புதிய தலைவர் நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது.

கிராம ரீதியான அபிவிருத்திக்கு பட்டதாரிகள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்

(றொக்ஷன்)

புதிதாக நியமனம் பெறுகின்ற பட்டதாரிகள் அனைவரும் அரச சேவையில் விசுவாசத்துடன், அர்ப்பணித்து செயற்பட வேண்டும். புதிய நியமனங்களை யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் வழங்கவுள்ளோம். கிராம ரீதியான அபிவிருத்திக்கு நீங்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 2,039 பட்டதாரிகளுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அரசசேவை நியமனங்கள் வழங்கப்பட்டன, இந் நிகழ் வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

2012 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டக் கூட்டத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கையில் உள்ள பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். இலங்கையிலுள்ள பட்டதாரிகள் தமக்கு எப்பொழுது அரச நியமனம் கிடைக்குமென ஏங்கியிருந்த வேளையில் இந்த அரச நியமனம் (கடந்த திங்கட்கிழமை) கிடைத்திருக்கின்றது. 2011 ஆம் ஆண்டுவரை பட்டம் பெற்ற யாழ். பட்டதாரிகள் 2039 பேருக்கு நியமனம் வழங்கப்படுகின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இங்கு படித்துவிட்டு நீண்ட காலமாக வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரிகளுக்கு அரச நியமனத்தைப் பெற்றுத் தருவதற்கு மிகவும் அக்கறையுடன் செயற்பட்டார்.

இப்பொழுது நியமனம் பெறும் பட்டதாரிகள் 15 பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்படவுள்ளனர். பாரிய பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது. புள்ளி விபரத் தரவுகள் சேகரிக்கும் பணிகளே உங்களுக்கு கொடுக்கப்படவுள்ளன. நீங்கள் புள்ளி விபரங்களை சரியாகக் கணக்கிட வேண்டும். அரச வேலையில் விசுவாசமாகவும் நம்பிக்கையுடனும் செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

யாழ்.மாவட்டத்தில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை போன்ற பிரதேசங்களில் கூடுதலான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உண்மையான அர்ப்பணிப்புடனும் நியாயமான மனப்பாங்குடனும் நீங்கள் செயற்படல் வேண்டும். இதுவே எமது எதிர்பார்ப்பாகும். பட்டதாரிகள் அமைச்சுக்களுடன் இணைக்கப்படவுள்ளார்கள். பொருளாதார அமைச்சு, விவசாய அமைச்சு போன்ற அமைச்சுகளுடன் இணைக்கப்படவுள்ளனர்.

மிகவும் கூடுதலான பட்டதாரிகளுக்கு அரச நியமனம் கொடுக்கப்படவுள்ளது. பஷில் ராஜபக்ஷவின் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பட்டாதாரிகள் இவ்வேலைத்திட்டத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். உங்களுடைய சேவை கிராம ரீதியான சேவையாக இருத்தல் வேண்டும். கிராம ரீதியான அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறினார்.

நயினாதீவு இறங்கு துறையில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் 24 மணிநேர சேவைகள்

(யாழ்.மத்தி நிருபர்)

நயினாதீவு இறங்கு துறைகளிலும் ஆலயச் சூழலிலும் 24 மணிநேர சேவையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்கள் முழுச் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

செஞ்சிலுவைலச் சங்கத்தின் யாழ். கிளைத்தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கத்தின் நேரடி மேற்பார்வையின் கீழும் சிரேஷ்ட தொண்டர் டாக்டர் இ.சற்குருநாதன் தலமையிலும் இச்சேவை இடம் பெறுகின்றது. சுமார் 100 இற்கும் மேற்பட்ட தொண்டர்களின் சேவை குறிகட்டுவான் இறங்கு துறைமுகத்தில் இருந்து நடைபெறுகின்றன.

இதேவேளை, கடற்படையினரும் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களையும் ஆலயத்திலிருந்து வரும் பக்தர்களையும் மிகக் கவனமாக படகுகளில் (குறித்த எண்ணிக்கையை கருத்திற்கொண்டு) ஏற்றி, இறக்குவதனைக் காணக் கூடியதாகவும் உள்ளது. இதேவேளை, கடற்படையினரும் படகு சேவைக்கு பாதுகாப்பு அளித்த வண்ணம் உள்ளனர். மேலும், வேலணைப் பிரதேச சபையின் உபஅலுவலக அலுவலர்கள், பொறுப்பதிகாரி ந.மோகனரூபன், பிரதேச சபை உறுப்பினர் ந.கருணாகரமூர்த்தி, சபைதலைவர் ஆகியோரின் முன்னிலையில் சேவை இடம்பெறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

நல்லூர் 'சயன்ஸ் அகடமி' நிறுவனத்தினால் அண்மையில் நிகழ்த்தப்பட்ட கௌரவிப்பு விழா மற்றும் 'வெற்றித்தேர்வு' நூல் வெளியீட்டின்போது யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன், நிறுவன இயக்குநரும் அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளருமான விரிவுரையாளர் சரா புவனேஸ்வரனிடமிருந்து சிறப்புப் பிரதியினைப் பெறுவதை படத்தில் காணலாம்.

சட்டவிரோத மண்ணை லொறியில் ஏற்றிச் சென்ற நபருக்கு அபராதம்

சுண்டுக்குளி,

சட்டவிரோதமான முறையில் மண்ணினை லொறியில் ஏற்றிச்சென்ற நீர்வேலியைச் சேர்ந்த நபருக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபா அபராதத்தினை செலுத்த உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர் சட்டவிரோதமான முறையில் மண்ணினை ஏற்றி சென்று கொண்டிருந்த போது நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் மா.கணேசராசா குறித் நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதற் கிணங்க ரூபா 5 ஆயிரத்தினை அபராதமாக செலுத்த உத்தரவிட்டார்.

மஹா கும்பாபிஷேகம்

(ஏழாலை நிருபர்)

குப்பிளான் வீரமனை, கௌரியம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்குரிய ஆரம்பக் கிரியைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகும். எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3.30மணி வரையும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளன.

ஆனைக்கோட்டை அடைக்கலமாதா தேவாலய வீதியை புனரமைக்குமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,

ஆணைக்கோட்டை உயரப்புலம் அடைக்கல மாதா தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு அடைக்கல மாதா வீதியை விரைவாகப் புனரமைத்துத் தருமாறு ஆனைக்கோட்டையிலுள்ள பொது அமைப்புகள் வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் தவிசாளரைக் கோரியுள்ளனர்.

மேற்படி தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா விரைவில் ஆரம்பமாக இருக்கின்றது. தேவாலயத்திற்கு அருகாமையிலுள்ள அடைக்கலமாதா வீதிவழியாக திருச்சொரூப பவனி நடைபெறவிருப்பதால் நடமாட முடியாதவாறு தேதமடைந்த நிலையிலிருக்கும் மேற்படி வீதியை தேவாலயத்திற்கு அருகாமையிலுள்ள பாடசாலை மாணவர்களின் நலன் கருதியும் புனரமைத்துத் தருமாறு பொது அமைப்புகள் தவிசாளரைக் கோரியுள்ளனர்.

இதேவேளை, வலி.தென் மேற்குப் பிரதேச சபை உறுப்பினரும் ஆணைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்தவருமான ஆ.சி.கணேசவேல் பல வருடங்களாக திருத்தியமைக்கப்படாமல் இருக்கும் மேற்படிவீதியைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணத் தொகுதி வழங்கல்

(ஏழாலை நிருபர்)

வலிகாமம், கல்வி வலயப்பிரிவில் உள்ள ஐந்து பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணத்தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

விளையாட்டுத்துறை அமைச்சினால் உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் விளையாட்டு உபகரணத்தொகுதி யாழ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்.வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், யாழ். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, யாழ். வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளன.

வலைகள் உலரவிடும் இடத்தில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம்வேண்டாம்

காக்கைதீவு கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,

காக்கைதீவு கடற்கரையில் இறங்கு துறைக்கு அண்மையில் அமைக்கப்படவிருக்கும் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை தடுத்து நிறுத்துமாறு காக்கைதீவு கடற்றொழிலாளர்கள் கடற்படையினரையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கோரியுள்ளனர்.

காக்கைதீவு கடற்கரையில் வலி.தென் மேற்குப் பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தைக்கு வரும் மக்களின் நலன் கருதி மீன் சந்தைக்கு அருகாமையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை அமைப்பதற்கான முயற்சியில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட இடத்தை கடற்றொழிலாளர்கள் தமது வள்ளங்களை கரையில் விடுவதற்கும் வலைகளை உலர்த்துவதற்கும் பயன்படுத்திவருகின்றார்கள்.

இந்த நிலையில், மேற்படி இடத்தில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைப்பது தொழிலாளர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் என்பதனால் பிரதேச சபையினால் அமைக்கப்படவிருக்கும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைப்பதை தடுத்து நிறுத்துமாறு தொழிலாளர்கள் அங்கு நிலை கொண்டுள்ள கடற்படை அதிகாரிகளையும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கோரியுள்ளனர்.

இந்திய அரசின் உதவித்திட்டத்தின் கீழ் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தால் வலிகாமம் மேற்கு, சங்கானையில் வறுமைக்கோட்டின் கீழுள்ள மீளக்குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த 126 பயனாளிகளுக்கு சைக்கிள்கள் கையளிக்கப்பட்டபோது, இந்திய தூதரக துணை அதிகாரி ஏ.இராஜமாணிக்கம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் இணைந்து பயனாளி ஒருவருக்கு சைக்கிள் கையளிப்பதை படத்தில் காணலாம். (படம் : சங்கானை நிருபர்)

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் சித்தமருத்துவ மாநாடும் கண்காட்சியும்

(காவலூர், கிளிநொச்சி நிருபர்கள்)

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் அச்சுவேலி நவக்கிரி அரச மூலிகைத் தோட்ட வளாகத்தில் சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும் ஒன்று நடத்தப்பட்டவுள்ளது.

இக் கண்காட்சியில் மூலிகைத் தோட்ட கண்காட்சி, சித்த மருத்துவ மாநாடு, சித்த மருத்துவ கண்காட்சி என்பன இடம்பெறவுள்ளன. சித்த மருத்துவக்கண்காட்சி, சித்த மருத்துவத்தின் சிறப்புகளை வெளிக்கொணரும் வைத்திய முறைகள் தயாரிப்புகள், பாரம்பரிய ஏடுகள் மற்றும் பாவித்த உபகரணங்கள் ஆகியவற்றைக் காட்சிப்படுத்துவதாக ஏற்பாடு செய்யப்படவிருக்கின்றது.

அகில இலங்கையில் இருந்தும் சித்த ஆயுர்வேத வைத்தியர்களினது படைப்புகள் காட்சிப்படுத்தப்படவுள்ளதால் மேற்படி கண்காட்சிக் கூடத்தில் சித்த ஆயுர்வேத வைத்திய மருத்துவத்தின் சிறப்பினை வெளிக்கொணர விரும்புகின்ற அபிமானிகள் அனைவரினதும் ஒத்துழைப்புக்களையும் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி சியாமா துரைரத்தினம் வழங்கியுதவுமாறு கேட்டுள்ளார்.

அளவெட்டி ஞானோதயா பாடசாலையை புனரமைக்க பழைய மாணவர்கள் முயற்சி

தெல்லிப்பழை,

அளவெட்டி, சீலன் கலட்டி ஞானோதயா பாடசாலையை புனரமைத்து வினைத்திறனை அதிகரிக்கும் முயற்சியில் பழைய மாணவ சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இப்பாடசாலையானது நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையை, அடுத்து உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாக விளங்கி மீண்டும் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட சூழ்நிலையில் மீளவும் தனது செந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் பாடசாலையின் பௌதீக வளம் மற்றும் மனித வளம் குறைவடைந்துள்ளது. இந்த நிலையை மாற்றி முன்மாதிரி ஆரம்பப் பாடசாலையாக இதனை உருவாக்கும் முயற்சியில் தாம் ஈடுபட்டுள்ளதாக பழைய மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

பழைய மாணவர் சங்கத்தின் ஐக்கிய இராச்சியக்கிளையின் அனுசரணையுடன் புதிதாக 80இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பழைய மாணவரான பொறியியலாளர் கலாநிதி பாலசிங்கம் நந்தகுமார், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சண்முகலிங்கமாரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

1990ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சகல மாணவர்களும் தமது ஆரம்பக்கல்வியை இப்பாடசாலையிலேயே கற்றனர். 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் திறம்பட இயங்கி வந்த இப்பாடசாலை அளவட்டி இடப்பெயர்வின் பின்பு தொடர்ச்சியாக பெரும் பின்னடைவைச் சந்தித்து வந்த இப்பாடசாலையை மீண்டும் சிறந்த பாடசாலையாக அளவெட்டியில் ஓர் முன்மாதிரி ஆரம்பப் பாடசாலையாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளையினரால் இப்பணி முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில்நடைபெற்ற யாழ்., மானிப்பாய், நவாலி புனித பேதுருபாவுலு ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவில் திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதையும் கலந்துகொண்ட பக்தர்களையும் திருச்சொரூப ஆசி பக்தர்களுக்கு வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

எவரை அடிமைப்படுத்த நினைத்தாலும் அவர்களுக்கு அழிவு நிச்சயம் என்பதே இன்றைய நியதி

(தொடர்ச்சி...)

இந்தியாவில் உலகிலுள்ள அனைத்து மதங்களும் உள்ளன. உலகிலுள்ள அனைத்து வகையான இனங்களும் உள்ளன. உலகிலுள்ள அனைத்து வகையான பண்பாட்டுப் பிரிவுகளுடன் இந்தியாவிற்குள்ளேயே உருவான பல்லாயிரம் பண்பாட்டு வேறுபாடுகளும் உள்ளன. இவையனைத்தும் உலக நாடுகளில் எங்கும் கண்டிராத ஒன்று. மற்றும் தொலை தூர வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டவை. இப்படி பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட மக்கள் வரலாற்றுக் காலங்கள் முழுவதும் ஒன்றாக, ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். இந்த வாழ்க்கை முறையானது உலகில் எங்கும் கிடைக்காத, வளமையான மற்றும் அமைதியான வாழ்க்கையை வரலாற்றுக் காலங்கள் முழுதும் தந்தன.

பல்வேறு காலகட்டங்களில் படையெடுத்து இந்தியாவிற்குள் வந்தவர்கள் இந்தியர்களோடு இரண்டறக் கலந்தனர். அவர்களே அதற்குப் பிந்திய காலத்தில் படையெடுத்து வந்தவர்களை எதிர்த்து நின்றனர். இவ்வாறாக படையெடுப்புகள் தொடர்ந்தன. இப்படி படையெடுத்து வந்தவர்கள் அனைவரும் இந்தியாவை விட்டு ஓடிவிடவில்லை. அவர்களும் இந்தியர்கள் ஆனார்கள். இப்படி இந்தியாவின் மீது படையெடுத்து வந்தவர்களையே இந்தியர்களாக்கிய பெருமை இந்தியாவிற்கு மட்டும் உண்டு. ஆனால், இலங்கை பூர்வீகக் குடிகளான தமிழர்களையும் இலங்கையில் தேயிலைப் பொருளாதாரத்தை உருவாக்கி காத்துக்கொண்டு இருக்கின்ற மலையகத் தோட்டத் தொழிலாளர்களையும் இலங்கைத் தமிழர்களாக ஆக்க முடியாமல் இருப்பது வருந்தத்தக்க செயல். இது சிங்களப் பெரும்பான்மை மக்கள் மற்றும் அவர்களது அரசியல்வாதிகளின் கவனத்திற்கு வர வேண்டும்.

வெள்ளைக்காரர்கள் மட்டுமே வணிக நோக்கத்திற்காக இந்தியாவைப் பிடித்தனர். 250 ஆண்டு காலம் தொடர்ந்து இந்தியாவைக் கொள்ளையடித்தனர். பிரித்தாளும் சூழ்ச்சியில் இந்தியாவைப் பிரித்து பாகிஸ்தான் பிரியக் காரணமாகினர். அவர்கள் செய்த அத்தகைய செயல் இன்றைக்கும் பெரிய பேரக்குணத்தை தூண்டும் வகையில் இத்துணைக்கண்டம் ஆகக் காரணமாக அமைந்தது.

இந்தியாவிலுள்ள சாதிப் பிரிவுகள் சில நேரங்களிலும் காலங்களிலும் சில சோதனைகளைத் தந்தாலும் மொத்தத்தில் ஒற்றுமையுடன் பொது நலன் காக்கும் குணம் கொண்டதாக உள்ளது. இன்றைக்கு இந்தியாவில் உலகையே அமைதி வழியில் நிர்வாகிக்கக்கூடிய மிகச் சிறப்பான நிர்வாக முறையுள்ளது. இந்தியாவில் மிகச் சிறுபான்மையினர் ஒன்றுக்கு மேற்பட்ட முறை குடியரசுத் தலைவராக வர முடிகின்றது. இரண்டு சதவிகிதம் கூட இந்திய அளவில் இல்லாத ஒரு மிகச் சிறுபான்மையினரின் பிரிவில் வந்தவரால் நாட்டின் பிரதம மந்திரி ஆக முடிகின்றது.

இந்தியாவின் சகோதரத்துவம் இலங்கைக்கு

இத்தகைய ஒரு சகோதரத்துவம் இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் கனவில் கூட எதிர்பார்க்க முடியாத ஒன்று. இத்தகைய மனப்பக்குவத்தையும் நடைமுறையில் பழக்கப்பட்டுப் போன இந்திய மக்களின் செயற்பாடு உலகில் மிகச் சிறந்த ஒன்று. இலங்கை அரசும் ஆட்சியாளர்களும் சிங்களப் பெரும்பான்மையினரும் இந்தியாவிடமிருந்து இந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். இலங்கையில் பூர்வீகக் குடிகளான தமிழர்களில் ஒருவர் இலங்கையினுடைய குடியரசுத் தலைவராக வருவதை சிங்கள இன மக்கள் மனம் ஏற்றுக் கொள்ளும் நாளை உருவாக்க வேண்டும்.

ஒரு இனத்தை மற்றைய இனம் அடிமைப்படுத்தி அவர்களிடம் கட்டாய உழைப்பினை வாங்கி எதற்கும் பயன்படாத பிரமிட்டுகளைக் கட்டலாம் அல்லது பெரிய சுவரை எழுப்பலாம். (சீனாவில் கட்டப்பட்ட பெருஞ்சுவர் போன்றது). ஆனால், அந்நாட்டின் அனைத்து மக்களுக்கும் பயன்படும் வகையில் எத்தகைய ஆக்கக் காரியத்தையும் செய்து விட இயலாது. அடிமைப்படுத்தி, வேலை வாங்கிய காலம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மறைந்து போனது. இன்றைக்கு யாரை அடிமைப்படுத்த நினைத்தாலும் அப்படி நினைப்பவர்களுக்கு அழிவு நிச்சயம்.

இந்தியாவில் சாதியின் பேரில் ஒரு காலத்தில் உயர்வு, தாழ்வுகள் இருந்தன. அதைப் போக்குவதற்காக பல சமூக வல்லுநர்கள் போராடினார்கள், வெற்றியும் கண்டார்கள். ராமானுஜர், நாராயண குரு, மகாத்மாகாந்தி, பெரியார், டாக்டர். அம்பேத்கர் என பல மகான்களும் அறிஞர்களும் தொடர்ந்து சாதி வேறுபாடுகளை அகற்ற உழைத்தார்கள். அதன் பலனாக இன்றைக்கு ஒன்றுபட்ட இந்தியாவையும் அதன் பயன்களான வளமான மற்றும் அமைதியான இந்தியாவையும் காண்கின்றோம்.

இந்த அமைதியானது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பல தலைவர்கள் உழைத்து மக்களின் மனதைப் பக்குவப்படுத்திய தன் விளைவாகக் கிடைத்த பயன் ஆகும். இந்தியாவிலே ஒரு சாதிக்கு மற்றைய சாதியினரால் இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றிப் பொது இடத்திலே பேசினால் அதைக் கேட்பார்கள். அப்படி இழைக்கப்படும் கொடுமைகள் அநியாயமானது. அதைத் தவிர்க்க வேண்டும் என அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொது மக்கள் பேசிக் கொள்வார்கள். அப்படிப் பேசிக் கொள்பவர்களில் மிகப்பெரும்பான்மையினர் சாதிக் கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்க மாட்டார்கள். தங்கள் சாதியினர் தான் அவ்வாறு செய்கின்றனர். ஆகவே, இனிமேல் அப்படிச் செய்யக்கூடாது என தங்கள் சாதியினருக்கு உணர்த்த வேண்டும் என உறுதியெடுப்பர் அப்படியே செயற்படுத்துவர்.

பல சாதி சங்கங்கள்

அவர்களுக்கென்றே கூட்டம் போடும் போது அங்கு தங்கள் சாதியினரால் அடுத்த சாதியினருக்கு தீங்கு ஏற்படாமலிருக்க வேண்டும் என பேசுவர். திட்டமிடுவர். இவையனைத்தும் இந்தியாவில் பல காலமாக நடைமுறையில் உள்ளது. பல கிராமங்களில் பல்வேறு சாதியினர் இருக்கின்ற சூழலில் பல சாதிகள் ஒற்றுமையாக எப்படியிருக்க வேண்டும் எனும் பண்பாடேயுள்ளது. இந்தியாவில் உள்ள பல எடுத்துகாட்டுகளை படிப்பினையாக எடுத்துக் கொண்டு செயற்பட்டால் இலங்கையில் நிரந்தர அமைதியை உருவாக்கி விடலாம். இதை சிங்கள இன மக்கள் உணர வேண்டும். தங்கள் இனத்தின் தவறான நடவடிக்கையால் தமிழர்களை தங்களுக்கு எதிரிகளாக்கிக் கொண்டோம் என்ற குற்ற உணர்வு சிங்கவர்களிடம் இருக்கவேண்டும். அந்த உணர்வை அடிப்படையாகக் கொண்டு இனிமேல் செயற்பட வேண்டும். அப்படிச் செயற்பட்டால் தான் உண்மையான இன ஒற்றுமையை ஏற்படுத்த இயலும்.

தமிழினத்தின் இதயம் இலங்கை

தருவது: சுதர்ஷன நாச்சியப்பன் இந்திய பாராளுமன்ற உறுப்பினர்

சிங்கவர்கள் தங்களின் சுய நலத்தால் சகோதரத் தமிழர்களை இழந்து விட்டோம் என்ற கவலையை ஒவ்வொரு சிங்கவர்களிடத்திலும் ஏற்படுத்தவேண்டும். அப்படி ஏற்படுத்தினால் அது இழந்த உறவை புதுப்பிக்க என்ன வழி என யோசிக்கத் தூண்டும். அப்படி தூண்டப்படும் யோசனையை வைத்துக்கொண்டு தமிழர்களுக்கு உதவுவதற்கும் அவர்களின் நியாயங்களை ஏற்றுக் கொள்வதற்கும் வழி பிறக்கும். இதை சிங்களப் பெரும்பான்மையினர் செய்ய வேண்டும்.

பாதிக்கப்பட்ட இனத்தின் நியாயமான நிலைகளை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு உதவி செய்தால் மட்டுமே அவர்களை நண்பர்களாக்க இயலும். இல்லாவிட்டால் இயலாது என்ற உண்மையை ஒவ்வொரு சிங்களவரும் தமிழரும் உணர வேண்டும். இதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். இதுவே நிரந்தர அமைதியை இலங்கையில் ஏற்படுத்த உதவும்.

7. தமிழர் - சிங்களவர் - உறவு சீர்திக்க வேண்டியவை

7.1 சிறுபான்மையினரின் கடமை

இருவேறு ஒன்றுபட்ட சிறுபான்மையினரால் தமிழர்களால் சாதாரணமாக உள்ள பெரும்பான்மையினரின் நல்லெண்ணத்தையும் நட்பையும் பெற இயலும். அதன்மூலம் சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இயலும். மேலும், ஒரு இனத்தின் பண்பாடும் செயற்பாடும் மிகச்சிறப்பானதாக இருக்கின்றபோது அதைச் செயற்படுத்துகின்ற அம்மக்களின் தொலை நோக்குப் பார்வை மிகவும் சரியானதாக இருக்க வேண்டும், அப்படி சரியானதாகவும் மற்றைய மக்களையும் தன் பண்பாட்டிற்குள் கொண்டு வந்து அனைவரும் நலமாக வாழ வேண்டும் என்ற எண்ணமும் வேண்டும். அந்த எண்ணமும் செயல்பாடும் இல்லாவிட்டால் எவ்வளவு பெரிய பண்பாடும் பயனற்றுப்போகும்.

ஒரு காலத்திலே மாஸ்கோ நகர அரசு (பிரின்ஸ்பாலிட்டி) சிறிய அளவில் இருந்திருக்கின்றது. அது பல்வேறு நல்ல கருத்துகளை மற்றவர்களும் தானே பின்பற்றும் அளவிற்கு செய்திருக்கின்றது. இதனால் மற்றைய பெரும்பான்மையான மக்கள் அவர்கள் அந்தக் கருத்துகள் காலப்போக்கிலே பண்பாடாக உருவெடுத்திருக்கின்றது. அது இறுதியாக ரஷ்யப் பண்பாடாக மாறியுள்ளது. அதுவே ரஷ்யா என்ற பெரிய நாடு உருவாகக் காரணமாக அமைந்திருக்கின்றது என கேள்விப்பட முடிகின்றது. இவ்வாறாகவே உலகில் பல தேசிய நாடுகள் மிகச் சிறுபான்மையினரின் முயற்சியால் உருவாகியிருக்கின்றது. இந்த உண்மையை இலங்கை வாழ் பூர்வீகத் தமிழர்கள் உணர வேண்டும். இந்த நோக்கத்தில் பல ஆய்வுகளை மேற்கொண்டு அவர்கள் செயற்பட வேண்டும்.

இலங்கை பூர்வீகத் தமிழர்களால் சிங்களப் பெரும்பான்மையினரைத் தங்களின் நண்பர்களாகத் தொடர்ந்து வைத்துக்கொள்ள இயலவில்லை. தங்களால் பாதுகாக்கப்படுகின்ற, வளர்க்கப்படுகின்ற இனம் சிங்கள இனம் என உரிமை கோர முடியவில்லை. இந்தியாவில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள இந்தப் பழக்கத்தை இலங்கையில் பின்பற்றி வெற்றிக்காண இயலவில்லை.

7.2. தமிழர்களிடத்தில் ஒற்றுமையின்மை

இவற்றுக்கெல்லாம் காரணம் தமிழர்களிடத்தில் உள்ள ஒற்றுமையின்மை ஒன்றை மட்டுமே முழுக் காரணமாகக் கொள்ளலாம். தங்களுக்குள் ஒற்றுமையில்லாத இனங்களால் அடுத்தவர்களிடத்திலும் ஒற்றுமையாக இருக்க இயலாது என்ற உண்மையை முதற் கட்டமாக தமிழர்கள் உணர வேண்டும். இதேயளவில் இரண்டாவது கட்டமாக சிங்களவர்களும் உணர வேண்டும். சிங்களவர்களும் தங்களுக்குள் ஒற்றுமையாக இருந்ததாக வரலாறு இல்லை. தமிழர்கள் மட்டும் தங்களுக்குள் ஒற்றுமையாக இருந்து, தொடர்ந்து தங்களின் உயர்ந்த பண்பாட்டின் பயன் சிங்களவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டிருந்தால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் இக்கட்டான சூழல் ஏற்பட்டிருக்காது.

தமிழர்கள் தங்களின் தவறுதல்களைப் பட்டியலிட்டிருந்தால் சகோதர சிங்களவர்களின் நட்பை இழந்திருக்க இயலாது. தமிழ் மக்களுக்கு இத்தகைய அழிவும் இழப்பும் ஏற்பட்டிருக்காது தங்களுக்குள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அந்த ஒற்றுமை மட்டுமே நியாயமான முடிவுகளை எடுக்க வாய்ப்பாக அமையும். ஒற்றுமையில்லாமல் பல்வேறு குழுக்களாகப் பிரிகின்றபோது மற்றைய குழுக்களின் செயற்பாடுகளுக்கு ஏற்ப தங்களின் செயற்பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும்.

இது போல் மாற்றிக் கொள்ளும் போது அடிப்படையான சிங்கள, தமிழ் இன ஒற்றுமைக்கான மையக் கருத்துக்கு வழியில்லாமல் போயிருக்கும். இப்படி இலங்கை பூர்வீகத் தமிழர்கள் தங்களுக்குள் ஒற்றுமையாக இருந்து ஒருமித்த கருத்தை எடுத்தால் மட்டுமே அவர்களுக்கு அமைதி கிடைக்கும். அப்படி ஒற்றுமையாக இருப்பதைத் தவிர்த்தால் அதனால் ஆபத்து சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் பொதுவானதாக அமையும்.

எந்த ஒரு அமைப்பும் ஒற்றுமையாக இல்லாதபோது அந்த அமைப்பு அடுத்த அமைப்புகளுடன் அமைதியாக இருக்க முடியாது இதுவரை தமிழர்கள் ஒற்றுமையாக இல்லாததால் அவர்களால் ஒட்டுமொத்த தமிழர்களின் நலன்காக்கும் ஒரே நோக்கில் செயற்படமுடியவில்லை இதுவே சிங்கள அரசியல் வாதிகளுக்கும் சிங்கள இனவெறியவர்களுக்கும் பலமாகப் போனது. இவர்களைப் பிரித்து துன்புறுத்தினால் அவர்கள் அடையாளம் தெரியாமல் போய்விடுவார்கள் என நம்பத்தொடங்கினார்கள். இதனாலேயே தமிழர்களின் நலனை மற்றும் அவர்களின் அடிப்படை உரிமைகளை ஒழிப்பதிலும் சிங்களவர்கள் ஆர்வம் காட்டினார்கள்.

நான்கு காளைகள் ஒற்றுமையாக இருந்தபோதும் சிங்கத்தை எதிர்த்து விரட்டின. நான்கு காளைகள் ஒற்றுமையில்லாமல் பிரிந்தபோது சிங்கம் அந்தக் காளைகளை அடித்து தின்றது. இதே நிலைதான் இலங்கையில் இப்பொழுது நடைபெறுகின்றது.

தமிழர்கள், சிங்களவர்களுக்கு இணையான அந்தஸ்தைப் பெற வேண்டுமானால் ஒரே பிரிவான தமிழர்கள் ஒன்று பட்ட தமிழர்களாக இருக்க வேண்டும். இந்நிலையானது உலகளாவிய நல்லெண்ணத்தைப் பெற உதவும்.

இலங்கை பூர்வீகத் தமிழர்கள் வரலாற்றில் உலகே வியக்கும் பல பண்பாட்டுச் சிறப்புகள் உள்ளன. ஆழமான ஆன்மிகக் கருத்துகள் உள்ளன. உலகே வியக்கும் இத்தகைய பண்பாட்டை சிங்களச் சகோதர மக்களை ஈர்க்கும் வகையில் ஏன் செய்யவில்லை என்ற கேள்வி எழுகின்றது. சுதந்திரப் போராட்டக் காலத்தில் இலங்கை பூர்வீகத்தமிழ் இலங்கையின் ஒற்றுமைக்காகவும் நாட்டின் விடுதலைக்காகவும் பாடுபட்டார்கள். அவர்கள் அன்றைக்கே இலங்கையினுடைய விடுதலைக் கோரிக்கையை வைத்து முழு மூச்சாக ஒரு தனி நாடாக உருவாக்கியதில் அவர்கள் பங்கே முதன்மையானது அன்றைக்கு சுதந்திரப் போராட்ட முன்னணியிலும் சரி மற்றைய கல்வி, வியாபாரம் போன்ற துறைகளிலும் முன்னேறி இருந்தார்கள்.

அன்றைக்கு அவர்கள் பெரும்பான்மை சிங்களவர்களால் தமிழர்களுக்கு எதிர்காலத்தில் ஆபத்து வரலாம் என யோசித்து இருந்தால் தமிழர்களுக்கென்றே ஒரு தனி நாடு கோரிக்கையை வைத்து அன்றைக்கே **தமிழர்களுக்கென்று ஒரு தனி நாட்டை பெற்றிருக்க முடியும். அல்லது இலங்கைத்தீவு தமிழகத்தின் தென் கோடியில் உள்ளதால் தமிழகத்தோடு சேர்த்த ஒரு இந்திய மாநிலமாக ஆக்கியிருக்க முடியும். அப்படி ஆக்கியிருந்தால் இன்றைக்கு தமிழகத்தில் உள்ள தமிழர்களைப்போல் அகண்ட இந்தியாவின் ஒரு பகுதியாக வளமையுடனும் அமைதியுடனும் வாழ்ந்திருக்க முடியும்.** ஆனால், அவர்கள் அப்படி ஒரு கோரிக்கையை ஏன் வைக்கவில்லை என்ற கேள்வி இன்றைக்கு கேட்க வேண்டிதொன்றாக உள்ளது.

(தொடரும்...)

சமூக ஜனநாயக சீர்திருத்தங்களில் தமிழ்ப்பெண்கள்

ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே பாரதியார் பெண்களின் சம உரிமைகளுக்காக ஓங்கி குரல் எழுப்பி சமத்துவ நீதி நிலைநாட்டப்பட வேண்டுமென வலியுறுத்தினார். பெண்கள் கல்வியறிவுள்ளவர்களாக மட்டுமின்றி உயர் கல்வி கற்று, பட்டங்கள் பெற்று நாட்டு நிர்வாகப் பொறுப்புகள், சபையாகிய சட்ட சபைகளுக்கும் சென்று தீர்மானங்கள் எடுப்பதில் தமது பங்களிப்பை ஆற்றவேண்டுமென அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளார் அப் பெருங்கவிஞர்.

இன்று கணிசமான எண்ணிக்கையுள்ள பெண்கள் படிப்பறிவுள்ளவர்களாக பட்டதாரிகளாக, பொறியியல் நிபுணர்களாக பல்துறைகளிலும் காலபதித்து வருகின்றமை கண்கூடு. நமது நாட்டில் மட்டுமல்ல, பல்வேறு நாடுகளிலும் அரசியல் ஆண்களுக்கான துறையெனப் பலகாலமாக நம்பப்பட்டது. பணபலம், செல்வாக்கு, வன்முறைகளை எதிர்த்துப் போராடும் துணிவு முதலியவை தேவையென்பதால் அத்துறையில் பெண்கள் ஈடுபடுவது எளிதான விடயமல்ல.

பண்டையக் காலத்தில் அரசிகள் ஆட்சி செய்த வரலாறுகள் வெகு அருமையாக உண்டெனினும், பரம்பரை பரம்பரையாக பெண்கள் அரசியலில் ஈடுபடுவதும் வெகு துல்லியமாகப் பிரகாசிப்பதென்பதும் நடைபெற்றதாக இல்லை.

வாரிசு உரிமையாக இருந்த நிலை தவிர, பெண்களுடைய பங்காக அரசியல் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை. பெண்கள் வழமையான குழந்தைகளைப் பெறல், பராமரித்தல், குடும்பச் சுமைகளை தாங்குதல் என்ற நிலைதான் பாரம்பரியமாக பேணப்பட்டு வந்தது.

இலங்கையின் நவீன, சமூக, அரசியல் வரலாற்றின் உருவாக்கத்திற்கு பல பெண்கள் பங்களித்துள்ளனர். குறிப்பாக இலங்கையில் எழுபதுகளிலிருந்து ஏற்பட்ட பெண்நிலைவாத எழுச்சியும், பெண்கள் இயக்கங்களின் ஆர்வமும் இலங்கைப் பெண்கள் வரலாற்றை உருவாக்குவதற்கு தூண்டுகோலாக அமைந்துள்ளன.

இலங்கையில் சமூக முற்பகுதியிலிருந்து ஈடுபட்டு உழைத்த பெண்மணிகளில் சிலரை இங்கு குறிப்பிடலாம்.

இப்பெண்மணிகளில் ஒருவர் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மங்களம்மா மாசிலாமணி ஆவார். 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெண்கள் சமூகப்பணிகளிலும் அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது பெண்களின் இயல்புக்கு உகந்த காரியம் அல்ல என்ற கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. அத்தகைய பிண்ணனியில் சமூகப்பணிகளின் மூலம் பெண்களும் முன்னேற்றம் காணமுடியும் என்ற கருத்திற்கமைய 'பெண்கள் சேவா சங்கம்' எனும் அமைப்பினை உருவாக்கி 'தமிழமகள்' எனும் பத்திரிகையையும் ஆரம்பித்து இலங்கையின் முதற் பெண் பத்திரிகையாளர் எனவும் பெயர் பெற்றார்.

இவரைப் போலவே மலையகத்தில் மீனாட்சியம்மாளும் மிகச்சிறந்த எழுத்தாளர் ஆவார். பத்திரிகைத்துறையிலும் ஈடுபட்டவர். பெண்களின் சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றை வற்புறுத்திய மீனாட்சியம்மாள் பெண்கல்வி முன்னேற்றம், பெண்கள் தொடர்பான சட்டச் சீர்திருத்தங்கள் ஆகியவை குறித்தும் பத்திரிகையில் எழுதி வந்தார். இவர்களை விட டாக்டர் நல்லம்மா, நேசம் சரவணமுத்து, திருமதி ஈ.ஆர் தம்பிமுத்து, திருமதி அன்னம்மா முத்தையா, பரமேஸ்வரி கந்தையா, நேபிள் இராஜசிங்கம் போன்றோர் 20ஆம் நூற்றாண்டில் அரசியல் துறைகளிலும் சமூக முன்னேற்றத்துறையிலும் உழைத்த பெண்களிற் சிலராவார். இவர்கள் சமூக சீர்திருத்தம், தொழிலாளர் நலன், அரசியல் ஜனநாயக உரிமைகள் போன்ற பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க அளவு பணியாற்றியுள்ளனர்.

இவர்கள் தமது காலத்தில் காணப்பட்ட சமூகபாழமை வாதத்தையும், பிற்போக்குத் தனத்தையும் கண்டு மனந்தளர்ந்து விடாது பெண்களுடைய உரிமைகளுக்காக குரல் கொடுத்தனர்.

திருமதி சறோஜா சிவச்சந்திரன்

தொழிற்துறைகளிலீடுபட வேண்டும். தேசத்தின் சட்டவாக்கல் செய்யும் உயர்

அத்துடன் பொதுவான சமூக நலன் கருதிய செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர். இன்றைய சூழ்நிலையில் நம்மத்தியிலுள்ள பெண்கள் ஆணாதிக்க சமூகத்தில் பொம்மையாக அமிழ்ந்து விடாமல், பெண்களுடைய பிரச்சினையை பெண்ணிலைச் சிந்தனையூடாகத் தீர்க்கவும், செயற்படவும்கூடிய சூழலை பெண்கள் எய்துவதே உண்மையில் அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குரிய வழிகோலாகும்.

புலிகள்...(தொடர்ச்சி)

பகுதிகளையும் விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் அவர்கள் பயன்படுத்திய கட்டடங்கள், பூங்காக்களையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு பிரதேச செயலகம், பிரதேச சபைகளிடமும் கடிதங்கள் மூலம் இராணுவத்தினர் கோரியுள்ளனர். தற்போதுள்ள இராணுவ முகாம்களை நிரந்தரமாக்கும் நோக்குடனேயே இக் கோரிக்கைகளை, முன்வைத்துள்ளனர்.

இதேவேளை இப்பிரதேச சபைக்குட்பட்ட பண்டத்தரிப்பு காடாபுலம் வைத்திய சாலைக்கு அருகாமையிலுள்ள 49 சதுர பரப்பளவான நிலப்பரப்பும் பெரிய விளான் பிரதேசத்தில் 7 சதுர பரப்பளவான நிலப் பரப்பையுமே தமக்குத் தருமாறு இராணுவத்தினர் கோரியுள்ளனர். மேலும் உரிமையாளர் இல்லாத ஆதனங்களையும் வெளி மாவட்டங்களில் வசிப்பவர்களுடைய ஆதனங்களையும் தடையாளப்படுத்துமாறு இராணுவத்தினர் கேட்டுள்ளனர்.

வரைபட ரீதியாக பிரதேச சபைக்குட்பட்ட ஆதனங்களையும் அரச ஆதனங்களையும் துல்லியமாக அடையாளப்படுத்துகின்ற இராணுவத்தினர் அந்த ஆதனங்களையும் தமது இராணுவ பயன்பாட்டிற்கு தரவேண்டுமெனவும் அதிகாரிகளை வற்புறுத்தியுள்ளனர்.

இதேபோன்று காக்கைதீவுப் பகுதியில் மீன் சந்தைக்காக அமைக்கப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலைய ஆதனத்தையும் கடற்படையினர் எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி தமது கடற்படை முகாமை விஸ்தரிப்பதற்காக தரவேண்டுமெனவும் கோரி அந்த ஆதனப் பகுதியையும் கையகப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை இதற்கான அனுமதி பொது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது எனவும் மக்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் நிரந்தர இராணுவ முகாம்களை அமைக்கமுடியாது எனவும் இராணுவத்தினருக்கு உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

நாளை...(தொடர்ச்சி)

அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் சங்கத்தினரால் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கவுள்ள பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தினால் நோயாளர்கள் பாதிப்புக்குள்ளாவர். இந்தப் போராட்டத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளை வெளிக்கொண்டுவருவதற்காகவே நாங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோமென நோயாளர்களின் மனித உரிமைக்கான மக்கள் சங்கத்தின் இணைத் தலைவர் விசுவலிங்கம் கந்தவேள் , யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி மு. உதயசிறி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் மேலும்தெரிவிக்கையில்- யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெறும் சம்பவங்கள் தொடர்பாக கடந்த சில வாரங்களாக முரண்பாடான பல செய்திகள் வெளிவந்துகொண் டிருக்கின்றன. இது தொடர்பான உண்மை நிலை வெளிக்கொணரப்பட வேண்டும். இவ்வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பாக விசாரணை செய்யப்பட வேண்டும்.

எந்தவொரு விசாரணைகளும் செய்யப்பட்டு முடிவுகள் வெளிப்படுத்தப் படவேண்டும். காலதாமதமின்றி முடிவுகள் வெளியிடப்படவேண்டும். ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவுள்ளோம். இவ் உண்ணாவிரதப் போராட்டமானது காலை 8.00 மணியிலிருந்து மேற்கொள்ளப்படவுள்ளது. யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா அலுவலகத்திற்கு முன்னால் ஒருவரும் மருத்துவ சங்கத் தலைவரும் கதிரியக்க நிபுணருமான வைத்தியகலாநிதி எஸ். நிமலனின் அலுவலகத்திற்கு முன்னால் ஒருவரும் என்ற வகையில் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்க கவுள்ளோம் என்றனர்.

படுகொலை...(தொடர்ச்சி)

வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசாங்கத்திற்கு கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரகம் வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் பட்டினிக்கு எதிரான அமைப்பு என்ற அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றி வந்த இந்த 17 பேரும் மூதூரில் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தத்தின்போது கொலை செய்யப்பட்டிருந்தனர்.

2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கூட்டத்தொடரின்போது, அரசாங்க தூதுக்குழுவினர் இப்படுகொலை தொடர்பான வழக்குகளை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக உறுதியளித்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கை மீண்டும் விசாரணை செய்யுமாறு பொலிஸாருக்கு சட்ட மா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. பொலிஸார் மீள் விசாரணையை ஏற்கெனவே மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்த வழக்கு தொடர்பாக இராஜதந்திர முயற்சிகளை முன்னெடுத்த கொழு ம்பிலுள்ள பிரான்ஸ் தூதரகம், இவ் வழக்குகளின் விசாரணையின் முன்னேற்றத்தை சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் விசாரணை செய்தது.

இதன்படி கொலை செய்யப்பட்ட தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் 17 பேரின் குடும் பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகளுடனான சந்திப்பின்போது பிரான்ஸ் தூதுவர் கிறிஸ் ரின் ரிபிச்சொன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவும் பரிந்துரைத்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதன் மூலம் இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தத்தை தவிர்த்துக்கொள்ள முடியுமென சட்டமா அதிபரின் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இப்படுகொலைச் சம்பவம் தொடர்பாக அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச பொதுமன்னிப்புச்சபை ஆகியன நீதியான விசாரணை செய்யுமாறு அழுத்தம் கொடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா...(தொடர்ச்சி)

காலை மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து, பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி எரிக் பெரேரா மற்றும் பொலிஸ் அதிகாரிகள் சடலத்தினை பார்வையிட்டதுடன், மாவட்ட நீதிவான் முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வவுனியா பொலிஸார் குறிப்பிட்டனர்.

இ.போ.ச.சபையினால்...(தொடர்ச்சி)

முகாமையாளர் எஸ்.ஏ.அஸ்கர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவையினை ஏனைய பிராந்திய நிலையங்களிலும் பார்க்க முன்னணி சாலையாக மாற்றுவதற்கு தொழிலாளர்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு குளிரூட்டப்பட்ட இ.போ.ச சேவையினை செயற்பட வைப்பதற்கு இ.போ.ச உயர் அதிகாரிகளிடம் அனுமதி கோரப்படவுள்ளது. இதற்கான அனுமதி கிடைத்ததும் வெகுவிரைவில் இந்தச் சேவையினை ஆரம்பிக்கவுள்ளோம்.

இச் சேவைக்காக யாழ்.பேருந்து நிலையத்திலும் கொழும்பு பேருந்து நிலையத்திலும் பேருந்து ஆசனப் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளுடன் புறப்படும் பேருந்து சேவை உணவிற்காக மட்டும் இடை நேரத்தில் நிறுத்தப்படும். வேறு இடங்களில் இச் சேவை நிறுத்தப்படமாட்டாதென அவர் மேலும் தெரிவித்தார்.

சிங்கத்துடன்...(தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு,

இந்திய அரசை இலங்கை அரசு பல தடவைகள் ஏமாற்றியுள்ளது. தற்போதும் ஏமாற்றி வருகின்றது.

13 பிளஸ், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஆகிய விடயங்களில் இந்தியாவை ஆசியாவின் அதிசய நாடான இலங்கை தொடர்ந்து ஏமாற்றி வருகிறது.

இந்தியாவைச் சமாளிப்பதற்கு தற்போது வட மாகாண சபைத் தேர்தல் என்ற கதையை இலங்கை அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இலங்கை அரசு எவரிடம் சொன்னாலும், இல்லாவிட்டாலும் வட மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடாக இருந்து வருகின்றது. இலங்கை அரசு இதைச் செய்தேயாக வேண்டும்.

தெற்காசியப் பிராந்தியத்தின் வல்லரசு இந்தியாதான். எனவே, அந்நாட்டைத் தொடர்ந்து ஏமாற்ற முடியாது என்ற உண்மையை இங்குள்ள ஆட்சியாளர்கள் விரைவில் புரிந்துகொள்வர். இந்தியாவின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு.

தூங்கிக் கொண்டிருந்த சிங்கத்துடன் விளையாடப் போய் நரி தனது உயிரைப் பறி கொடுத்த கதை போல்தான் இந்தியாவிடம் போலி வாக்குறுதிகளை வழங்கி அதாவது, இந்தியா சொல்வதையும் இந்தியா சொல்லாததையும் செய்வோம் எனக் கூறி இலங்கை வசமாக மாட்டிக் கொள்ளப் போகின்றது.

இவ்வாறு ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

சட்ட வைத்திய...(தொடர்ச்சி)

2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வேலணை பிரதேச வைத்தியசாலையில் குறித்த வைத்தியர் கடமையில் இருந்த போது தாச்சிகா என்ற தாதி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தது. குறித்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது மருத்துவ தாதியின் பெற்றோர் சார்பில் ஆஜராண சட்டத்தரணிகள் குகனேஸ்வரன் , சுகாஸ் ஆகியோர் நீதிவானிடம் சடலம் தொடர்பாக கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை 1 வருடம் ஆன பின்பும் கிடைக்கவில்லை. இதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்த அடுத்த தவணையின்போது கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியை மன்றில் ஆஜர் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

இதனை அவதானித்த ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா சட்டத்தரணிகளின் கோரிக்கையை ஏற்று செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியை மன்றில் சமுகமளிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

யாழிலுள்ள...(தொடர்ச்சி)

H.N.D.A./ HNDM கற்கை நெறியினை முடித்தவர்கள் அனைவருக்கும் பட்டதாரிப் பயிலுநர் நியமனங்கள் வழங்கப்படவேண்டுமெனக் கோரியுள்ளார். இதற்கமைய தற்பொழுது வரையுள்ள இக்கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த சகலரையும் பட்டதாரி பயிலுனர் நியமனங்களில் உள்ளடக்குமாறும் கேட்டுள்ளார்.

இந்த மகஜரினுடைய பிரதிகளை பொு நிர்வாக உள்நாட்டலுவல்கள், அமைச்சர் ஜோன் செனவிரட்ன மற்றும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இதனிடையே தொழில்நுட்பக் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டம் பெற்ற இந்த மாணவர்கள் நேற்று முன்தினம் தமக்கும் நியமனங்களை வழங்குமாறு கோரி யாழ். வீரசிங்கம் மண்டத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தால்...(தொடர்ச்சி)

இதுவரை கிடைக்கவில்லை.

இதே நிலைமைதான் ஏனைய தமிழ்ப் பகுதிகளிலும் நிலவுகின்றது. இந்த யுத்தத்தில் பெரும் எண்ணிக்கையானோர் மரணத்தைத் தழுவியும் .காய மடைந்தும் காணப்பட்டனர்.

பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் உயிர், உடைமைகளை இழந்து நிர்க்கதியான நிலையில் உள்ளனர். இவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்களும் மிகவும் மந்தகதியிலேயே செல்கிறது.

வீட்டுத் திட்டங்கள் தமக்கு விரைவில் கிடைக்கும் என எதிர்பார்த்து காலத்தைக் கடத்தியதுதான் மிச்சம் என பொது மக்கள் யாழோசைக்கு கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கிளிநொச்சிப் பகுதியில் மீள்குடியேறிய பலருக்கு வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இதுவரை கிடைக்கவிலலையென முறையிடப்படுகிறது. இக்கொடுப்பனவிற்கான பதிவுகள் கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்டு வங்கிக் கணக்குப் பதிவுகள், குடும்பஅட்டையில் பணம் பெற்றமைக்கான பதிவுகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் குறித்த பணம் வங்கிக் கணக்கிற்கு வரும் என பிரதேச செயலக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டபோதும் ஒரு வருடம் கடந்த நிலையிலும் இப்பணம் (25 ஆயிரம் ரூபா) வங்கிக் கணக்கிற்கு வரவில்லை எனவும் வங்கிக்கு அலைந்தது தான் மிச்சம் எனவும் மீள்குடியேறிய பலர் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதேசசபை...(தொடர்ச்சி)

இடத்தை ஆக்கிரமித்துள்ள கடற்படையினர் தங்கள் தேவைக்குப் பயன்படுத்துகின்றனர்.

இதனால் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்குப் பொருத்தமான இடம் இல்லாததினால் தனியார் காணியைக் குத்தகைக்கு எடுக்கவேண்டிய நிலை பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது.

காக்கை தீவுக் கடற்கரையில் அமைந்துள்ள கூறுவிலை மண்டபத்திற்கு அருகாமையில் வைத்து வியாபாரிகள் கடலுணவு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர். சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாது நிலத்தில் வைத்து மீன் விற்பனை செய்யப்படுவது குறித்து பொது மக்கள் பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து கூறுவிலை மண்டபத்திற்குக் கிழக்குப் பக்கமாக பிரதேச சபையினால் சுகாதார விதி முறைகளுக்கு அமைய மீன் சந்தை அமைக்கப்பட்டுள்ளது.

கடற்கரைக்கு வரும் வியாபாரிகளினதும் பொது மக்களினதும் நலன்கருதி சந்தைக்கு அருகாமையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்காக பிரதேச சபையினால் காணி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்கு முன்பே அப்பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் மேற்படி நிலத்தை ஆக்கிரமித்துள்ளதுடன் தங்கள் தேவைக்குப் பயன்படுத்தவும் முன்வந்துள்ளனர். இதனால் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைக்க முடியாத நிலை பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சியில்...(தொடர்ச்சி)

முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, குறித்த சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், சந்தேக நபரை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் கிளிநொச்சி பொலிஸார் குறிப்பிட்டனர்.

கல்வி...(தொடர்ச்சி)

சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இக்கல்லூரியின் புதிய அதிபர் என்று தன்னைக் கூறி வரவுப் பதிவேட்டில் முறையான அனுமதியின்றி அதிபர் வேணுகா சண்முகரத்தினம் கையொப்பமிட்டுள்ளார். இதனை இப் பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி.செல்வகுணவன் உறுதிப்படுத்தியுள்ளார்.

வேணுகா சண்முகரட்ணம் யா/ இராமநாதன் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். மாகாணப் பாடசாலையிலிருந்து விலகுவதற்கான விலகல் கடிதத்தை இன்னும் அவர் பெற்றுக் கொள்ளவில்லை. ஒரு பாடசாலையில் குறைந்தது 3 ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றினால் மட்டுமே அவர் வேறு பாடசாலைக்கு அதிபராக இடமாற்றம் பெற்றுக் கொள்ளமுடியும். இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது.

யாழ். வேம்படியில் தற்போது நடைபெறுகின்ற அதிபர் பதவி நிலை இழுபறிக்கு முக்கிய காரணம் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத்தினர். நான் இரண்டரை வருடங்களாக இந்த கல்லூரியில் அதிபராக இருக்கின்றேன்.

இக் கல்லூரியில் 70 வீதமான மாணவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்றார்கள். ஏனையவர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் வர்த்தகர்களின் பிள்ளைகள். ஏழை மாணவர்களும் இந்தப் பாடசாலையில் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக கல்லூரிக்கான நன்கொடையை வாங்குவதில்லை என நாம் முடிவு செய்தோம்.

இந்த முடிவானது பழைய மாணவிகள் சங்கத்தினருக்குப் பிடிக்கவில்லை. முன்னைய காலங்களில் வாங்கப்பட்ட நன்கொடைகள் தொடர்பில் எந்தவித கணக்கு அறிக்கையும் இது வரையும் காட்டப்படவில்லை,

பழைய மாணவர் சங்கத்தின் தலைவியாக பாடசாலை அதிபரே இருக்க வேண்டும். ஆனால், இந்த சங்கத்தில் அப்படி இல்லை. அதிபர் இருக்கக்கூடாது எனவும் கணக்குகளை தம்மிடம் கேட்கக்கூடாது எனவும் நினைக்கின்றார்கள்.

வெளிநாடுகளில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட 15 இலட்சத்திற்கு இதுவரை கணக்குகள் காட்டப்படவில்லை. இதைத் தட்டிக் கேட்டதாலேயே என்னை மாற்றி விட்டுத் தாங்கள் விரும்புகின்றவரைப் நியமிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கின்றனர் என்றார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, ராஜினி முத்துக்குமாரன், பிரதி அதிபர் திருமதி.செல்வகுணவன், பாடசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சுபசிவன், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர் நவக்குமார் மற்றும் பாடசாலையின் ஆசிரியர் விஜயமாலா ஆகியோர் கலந்துகொண்டனர் .

இதேவேளை பதவிமோகம் காரணமாக தற்போதைய அதிபர் பாடசாலையை விட்டு செல்ல மறுப்பதாகவும், பாடசாலைப்பணத்தை பழைய மாணவர் சங்கத்தினர் எவரும் குறையடவில்லை என்றும் வேம்படி மகளிர் கல்லூரிக்குள் அரசியலை உட்படுத்தி தனது பதவி ஆசையால் அதிபர் அவ்வாறு நடந்து கொள்வதாகவும் சங்க உறுப்பினர் ஒருவர் இக்குற்றச்சாட்டு தொடர்பில் யாழ் ஓசைக்குத் தெரிவித்தார்.

யாழ். கொழும்பு...(தொடர்ச்சி)

இயக்கச்சி சந்தியில் சென்ற சமயம் கட்டுப்பாட்டை இழந்து நிலை தடுமாறி தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பேரூந்தில் சுமார் 100 பயணிகள் வரையில் பயணித்தனர் எனவும் பலர் காயமடைந்திருக்கலாம் எனவும் சாரதியின் அதிகரித்த வேகமே விபத்துக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படை...(தொடர்ச்சி)

கொமடோர் நடராஜா குருபரன் என்ற இலங்கை கடற்படை அதிகாரியின் அரசியல் தஞ்சக் கோரிக்கையே கனேடிய அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இவர் கடற்படையின் அட்மிரல் தரத்துக்கு மூன்று நிலைகள் கீழாகப் பணியாற்றினார்.

இலங்கை படைகளின் நடவடிக்கைகளுக்கு உதவிய இவர், விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட எண்ணிலடங்காக பொதுமக்கள் கொல்லப்பட்ட போர் முடிந்த சில வாரங்களில் 2009, ஜூனில் ஓய்வு பெற்றிருந்தார்.

2009, ஓகஸ்ட் 4ஆம் நாள் தனது மனைவி பாமினி குருபரன் மற்றும் இரு பிள்ளைகளான மயூரன், கிருசாந்தி ஆகியோருடன் கனடாவில் அடைக்கலம் கோரினார்.

அதன் பின்னர் ரொரன்ரோவில் வசித்து வந்த இவர், இலங்கை கடற்படையில் பணியாற்றிய 5 தமிழ் அதிகாரிகளில் ஒருவராவார்.

இவர் இலங்கை அரசாங்க, அரச ஆதரவுக் குழுக்கள் மற்றும் போராளிகள் தொடர்பாக தாம் அச்சம் கொண்டிருப்பதாக கூறியுள்ளார்.

ஆனால், குடிவரவு அதிகாரிகள் இவர் உண்மையான அகதி அல்ல என்றும் போர்க் குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தவர் என்றும் தெரிவித்துள்ளனர்.

இவரது மேன்முறையீட்டை சமஷ்டி நீதிமன்றம் கடந்த ஜூன் 13ஆம் நாள் நிராகரித்தது.

இதனால் இருவரும் இவரது குடும்பத்தினரும் தற்போது இலங்கைக்கு நாடு கடத்தப்படும் நிலையில் உள்ளனர்.

ஓய்வு பெற்ற ஒரு மாதத்தின் பின்னர், இலங்கை அரச ஆதரவு கருணா குழுவினரால் தனது மனைவி கடத்தப்பட்டு, பெரும் தொகையான பணத்தை கப்பமாக கோரியதாகவும், இல்லையேல் குடும்பத்தை முற்றாக அழித்து விடுவோம் என்று மிரட்டியதாகவும் கொமடோர் குருபரன் கூறியுள்ளார்.

இதையடுத்து அவர் அமெரிக்கா சென்று கனேடிய எல்லையில் அடைக்கலம் கோரினார்.

கனேடிய குடிவரவு அதிகாரிகள் இவர் போரில் ஈடுபடவில்லை என்றும் தனிப்பட்ட ரீதியான போர்க் குற்றங்களைச் செய்யவில்லை என்றும் கண்டறிந்துள்ளனர்.

எனினும், இவர் இலங்கை கடற்படையின் இருண்ட செயற்பாடுகள் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு வசதிகளை அளிப்பதில் பங்கேற்றுள்ளார்.

இலங்கை படையினர் செய்த கொடூரங்களை அறிந்திருந்த போதும் 1985 தொடக்கத்தில் வெளிநாடு சென்ற போதும் கூட இவர் அதிலிருந்து வெளியேற முனையவில்லை என்று கனேடிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்கள் மற்றும் விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்படுவோரின் மனித உரிமைகளை தொடர்ச்சியாகவும், ஒழுங்கமைக்கப்பட்ட ரீதியாகவும் மீறிய ஒரு அமைப்பான கடற்படையில் நீண்ட காலம் பணியாற்றியதன் மூலம் இவர் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு உடந்தையாக இருந்துள்ளார் என்று கனேடிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை படைகள் கொடூரங்களைப் புரிந்துள்ளதை உறுதி செய்துள்ள இந்த நீதிமன்றத் தீர்ப்பு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

பத்தாயிரக்கணக்கான காணாமற் போதல்கள், நிறுவனமயப்படுத்தப்பட்ட சித்திரவதைகள் தொடர்பாக அறிக்கையில் அடங்கியுள்ள விரிவான சாட்சியங்களும், ஆதாரங்களும் இலங்கை கடற்படையை உள்ளடக்கிய இலங்கை பாதுகாப்புப் படைகள் இலங்கையின் பரந்துபட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட ரீதியான தாக்குதல்களுக்கு உதவியாக இருந்துள்ளது என்று தனது 50 பக்கத் தீர்ப்பில் நீதிபதி ஜோன் ஓ கீவ் தெரிவித்துள்ளார். கொமடோர் குருபரன் 1981இல் இலங்கை கடற்படையில் ஒருமின் பொறியியலாளராக இணைந்த இவர், தாம் ஒரு தமிழர் என்பதால் பல சவால்களை எதிர்நோக்கியதாக கூறியுள்ளார்.

2001ஆம் ஆண்டில் இலங்கை கடற்படையினரின் நடவடிக்கைகள் தொடர்பாக தகவல்களைத் தருமாறு விடுதலைப் புலிகள் கோரிய போதும், அதை தாம் நிராகரித்து விட்டதாக கொமடோர் குருபரன் தெரிவித்துள்ளார்.

பின்னர், 2008ஆம் ஆண்டில் மீண்டும் அதே கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும், தான் தொலைபேசி மூலம் மிரட்டப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருந்தாலும் தன்னை இலங்கை கடற்படையினர் புலிகளின் அனுதாபியாகவே சந்தேகித்ததாகவும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் தாம் கண்காணிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

'ஓபன் ஹார்ட்' சேர்ஜரிக்கும் 'பைபாஸ்' சத்திரசிகிச்சைக்கும் உள்ள வேறுபாடு

ஐந்து நிமிடங்களுக்கு மேல் இரத்த ஓட்டம் இல்லையெனின்றால், உடனே இதயம் நின்று போகும். இதயம் வேலை செய்யாது நின்று போனால், மூளை உட்பட அத்தனை உறுப்புகளும் செயலிழந்து, உயிர் நம் உடம்பிலிருந்து பிரிந்து மனிதன் இறந்துபோக நேரிடும். 1928ஆவது வருடம் வரை இதய அறுவைச்சிகிச்சை என்பது ஒரு முடியாத காரியமாகவே இருந்தது. 1928ஆம் ஆண்டு கட்லர் என்ற சேர்ஜன் எந்தவிதக் கருவியுமில்லாமல் மார்பின் இடது புறத்தைத் திறந்து கைவிரலால் இதயம் துடிக்கும்போதே இதய ஈரிதழ் வால்வு சுருக்கத்தை மூடிய முறை இதய அறுவைச்சிகிச்சை மூலம் விரிவடையச் செய்தார். அதன் பிறகு 1956 வரை சாதாரண இதய அறுவைச் சிகிச்சைகளை மேற்கூறிய மூடிய முறை அறுவைச் சிகிச்சைகளே உலகம் முழுவதும் நடந்து கொண்டிருந்தன.

1956ஆம் வருடம் அமெரிக்க பேராசிரியர் கிப்பன் என்ற இதய அறுவைச்சிகிச்சை நிபுணர். நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு, இதயத் துடிப்பை (இயக்கத்தை) நிறுத்தி 5 மணி நேரம்கூட இதயத் துடிப்பில்லாமல் திறந்த இதய அறுவைச்சிகிச்சை முறையை முதலில் செய்து காண்பித்தார். திறந்த இதய அறுவைச்சிகிச்சை:

இதயத் துடிப்பை நிறுத்தி இதய அறுவைச்சிகிச்சை செய்வதால் மட்டும் திறந்த அறுவைச்சிகிச்சை என்று கூறிவிட முடியாது. சாதாரணமாக 5 நிமிடங்களுக்கு மேல் இதயத்துடிப்பு நின்றாலே நாம் இறந்து விடுவோம். ஆனால், திறந்த இதய அறுவைச்சிகிச்சை செய்யும்போது 5 மணி நேரத்திற்கும் மேல் இதயத்துடிப்பை நிறுத்தி, மறுபடியும் இதய இயக்கத்தை உண்டாக்கி நோயாளியைப் பிழைக்க வைக்க முடியும்.

இந்த. திறந்த இதய அறுவைச்சிகிச்சை முறையில் செயற்கை இதயம், நுரையீரல் என்பவற்றை இயங்க வைக்க முடிகிறது. இந்த திறந்த முறை அறுவைச்சிகிச்சை முறையில் உடம்பிலுள்ள பிராணவாயு குறைந்த (அசுத்த) இரத்தம் முழுவதும் இரண்டு பெரிய பிளாஸ்டிக் குழாய்கள் மூலம் இணைக்கப்பட்டு உடம்பிலிருந்து உறியப்பட்டு, அந்த அசுத்த இரத்தம் செயற்கை நுரையீரல் ஒரு இயந்திரத்தில் செலுத்தப்படுகின்றது.

செயற்கை நுரையீரல் இயந்திரம் உடம்பின் வெளியே கொண்டு வரப்பட்ட அசுத்த இரத்தத்தை முழுவதும் சுத்தஞ் செய்து 100 சதவீதம் பிராணவாயு கலந்து சுத்த ரத்தமாக மாற்றுகிறது. இதயத்தைத் திறந்து சத்திரசிகிச்சை முழுவதும் முடிந்தவுடன் 30 டிகிரி செல்சியஸ் அல்லது அதற்குக் குறைவான இரத்த வெப்பத்தை, ஹைபோதேர்மியா இயந்திரம் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்தி, 37 டிகிரி செல்சியஸ் அளவு வந்தவுடன், இதயம் துடிக்க ஆரம்பிக்கிறது. அதே சமயம், மகாதமனியை கிளாம்ப் செய்த உபகரணத்தை எடுத்து விட வேண்டும். அந்த சமயத்தில் சத்திரசிகிச்சை செய்யப் பட்ட நோயாளியின் இரத்தத்தின் அமிலம், காரத்தன்மை மற்றும் இரத்த பொட்டாசியம், சோடியம் போன்ற உப்புச்சத்துகளைச் சரி செய்து, உடம்பின் இரத்தம் கசியும் தன்மையை யும் சரி செய்தவுடன், இதயத்துடன் இணைக்கப்பட்ட பிளாஸ்டிக் குழாய்களை ஒவ்வொன்றாக எடுத்து, கசியும் இரத்தத்தை உடம்பிலிருந்து வெளியேற்ற இதயத்தின் மேலும், வலது மார்புகூட்டிலும், பிளாஸ்டிக் குழாய்களை இணைத்து, உடம்பில் வீணாகும் இரத்தத்தை உடம்பின் வெளியே ஒரு பெரிய கண்ணாடி போத்தலிலும் இணைத்துவிடலாம்.





இதயத் துடிப்பை நிறுத்தி இதய அறுவைச்சிகிச்சை செய்வதால் மட்டும் திறந்த அறுவைச்சிகிச்சை என்று கூறிவிட முடியாது. சாதாரணமாக 5 நிமிடங்களுக்கு மேல் இதயத்துடிப்பு நின்றாலே நாம் இறந்து விடுவோம்...

சத்திரசிகிச்சை செய்த பிறகு இதயம் சரிவரத் துடிப்பதற்கும், மூளை, நுரையீரல் போன்ற மற்றைய உறுப்புகள் சரியாக வேலை செய்வதற்கும் சத்திரசிகிச்சை செய்த புண் ஆறுவதற்கும் சரியான மருந்துகளைக் கொடுத்து இதய சத்திரசிகிச்சை செய்த நோயாளியை முற்றிலும் குணப்படுத்தி விடலாம். இதுவே திறந்த இதய சத்திரசிகிச்சை செய்கின்ற முறையாகும்.

பைபாஸ் சேர்ஜரி:

பைபாஸ் சேர்ஜரி என்பது இதய இரத்தக்குழாய் முழுவதும் அடைபடுவதால் உண்டாகக்கூடிய மாரடைப்பு நோய்க்கு செய்யக்கூடிய இதய சத்திரசிகிச்சையாகும்.

இந்த சத்திரசிகிச்சை திறந்த முறை இதய சத்திரசிகிச்சை மூலம், செயற்கை இதயம் மற்றும் நுரையீரல் இயந்திரங்களை உபயோகப்படுத்தி இதயத் துடிப்பை நிறுத்தியும் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறல்லாமலும் பைபாஸ் சேர்ஜரியை மேற்கொள்ள முடியும். அவ்வாறு செய்வதற்கு காலில் உள்ள அசுத்த இரத்தத்தை இதயத்திற்கு கொண்டு செல்லும் செபனஸ் இரத்தக்குழாய் மற்றும் மார்புகூட்டின் உட்புறமுள்ள இடது மற்றும் வலது உள்மார்பு ரத்தக்குழாய்கள் மற்றும் முன் கையில் உள்ள ரேடியல் இரத்தக்குழாய்கள் போன்றவற்றை உபயோகித்து மேற்கூறிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இரத்தக்குழாய்களின் அடைப்பின் தன்மையைப் பொறுத்து மகாதமனியின் ஆரம்பத்திலும், இதய இரத்தக் குழாய் அடைப்பின் கீழும் இணைத்து பைபாஸ் சேர்ஜரி செய்யப்படுகின்றது. பைபாஸ் சேர்ஜரி என்பது திறந்த இதய சர்ஜரியின் மூலமும் செய்யக்கூடிய ஒரு தனிப்பட்ட இதய அறுவைச்சிகிச்சை முறை. பொதுவாக பொதுமக்களுக்கு ஓபன் ஹார்ட் சேர்ஜரியும், பைபாஸ் சேர்ஜரியும் ஒன்று என்ற குழப்பத்திற்கு மேற்கூறிய விளக்கம் பொருத்தமானதாக இருக்கும்.....

5 நிமிடத்திற்கு 25 இலட்சம் ரூபா

தமிழ் திரைப்படம் ஒன்றில் கௌரவ வேடத்தில் நடிப்பதற்கு ரூ.25 லட்சம் சம்பளமாக பெற்றாராம் அனுஷ்கா. விக்ரம் நடிக்கும் 'தாண்டவம்' படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார் அனுஷ்கா. இதற்கிடையில் சகுனி படத்தில் கார்த்தியுடன் கௌரவ வேடத்தில் நடித்தார். படத்தில் 5 நிமிடமே வரும் இக்காட்சிக்காக அனுஷ்கா ரூ.25 லட்சம் சம்பளம் பெற்றதாகக் கூறப்படுகிறது. நடிகர், நடிகைகள் கௌரவ வேடத்தில் நடிப்பது புதிதல்ல. ஆனால், ஒரு சிலர் சம்பளம் பெற்றுக்கொண்டு தான் நடிக்க வருகிறார்கள். இன்னும் சிலர் நட்புக்காக இலவசமாக நடிக்கின்றனர். கௌதம் மேனனின் 'விண்ணைத் தாண்டி வருவாயா' மற்றும் 'நடுநிசி நாய்கள்' படத்தில் சமந்தா கௌரவ வேடத்தில் நடித்தார். அதேபோல் 'ஒரு கல் ஒரு கண்ணாடி' மற்றும் 'சகுனியில்' ஆண்ட்ரியா கௌரவ தோற்றத்தில் நடித்தார். 5 நிமிட காட்சிக்கு அனுஷ்கா ரூ.25 லட்சம் பெற்றாரா? என அவரது முகாமையாளரிடம் கேட்டபோது அதுபற்றி கருத்துச் சொல்ல மறுத்துவிட்டார். இதுபற்றி ஒரு இயக்குநர் கூறும் போது, தீபிகா படுகோன், கரீனா கபூர் போன்றோர் அதற்கு மேல் வாங்குகின்றார்கள் என்றார்

ஸ்ரீகாந்த் நடிக்கும் சுட்டிப்பையன்

கொலிவூட்டில் சிறுவர், சிறுமி கதாப் பாத்திரங்களை மையமாக வைத்து படம் எடுப்பது மிகவும் அரிதாக உள்ளது.

இந்நிலையில் சின்னஞ்சிறுசுகளை நம்பி படம் பண்ண இயக்குநர் சிவாஜி துணிந்துள்ளார்.

இந்தப்படத்துக்கு 'சுட்டிப்பையனும் நான்கு திருடர்களும்' என்று பெயரிட்டுள்ளனர். முழுநீள நகைச்சுவை சித்திரமாக உருவாகும் இந்தப்படத்துக்கான வேலையை படக்குழுவினர் தொடங்கியிருக்கிறார்கள். விஜய் டி.வி. சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் மூலம் பிரபலமான மாஸ்டர் ஸ்ரீகாந்த், இதில் சுட்டி நாயகனாக நடிக்கிறார். இவருடன் மகாநதி ஷங்கர், ரோபோ ஷங்கர், சுருளி மனோகர், கிங்கொங் நான்குபேர் 'சிரிப்பு' திருடர்களாக கிச்சுகிச்சு மூட்டப்போகிறார்களாம்.

சுனைனாவின் அழுகைக்கு கிடைத்த பாராட்டு...

'தென்மேற்கு பருவக்காற்று' படத்தின் மூலம் தேசிய விருது பெற்ற இயக்குநர் சீனு ராமசாமி, தற்போது 'நீர்ப்பறவை' படத்தை இயக்கி வருகிறார். இதில் விஷ்ணு, சுனைனா இருவரும் இணைந்து நடித்துள்ளார்கள். படத்தின் நாயகி சுனைனாவை வெகுவாகப் பாராட்டியுள்ளார் இயக்குநர் சீனு ராமசாமி.

'நீர்ப்பறவை படத்தில் நடித்ததால் சுனைனாவுக்கு நிச்சயம் தேசிய விருது கிடைக்க வாய்ப்புள்ளது. சுனைனாவின் நடிப்புத் திறமையை பார்த்து பிரமித்துப் போனேன்.

கவிப்பேரரசு வைரமுத்துவின் பாடலை படமாக்கும்போது நிஜமாகவே சுனைனா அழுது விட்டார். ஒவ்வொரு முறை பாடலைப் போடும்போது சுனைனா கண்ணில் நீர் வழிந்தது. கிளிசரின் போட்டு அழுகை காட்சியில் நடிகைகள் நடிப்பது வழக்கம். ஆனால், இயல்பாகவே பாடல் காட்சியில் சுனைனா அழுது நடித்தது உருக்கமாக அமைந்தது என்றார்.

பத்திரிகையாளராக வருகிறார் தப்ஸி...

ஹொலிவுட்டில் அஜித், ஆர்யா நடிக்கும் புதிய படத்தில் தப்ஸி பத்திரிக்கை நிருபராக நடிக்கின்றார். தென்னிந்திய மொழிப்படங்களில் நடித்த பாஞ்சாபி ஜிலேபி தப்ஸி பன்னு, பொலிவுட் படத்தில் வித்தியாசமான 'ஹொர்ஸ்டைலில்' நடித்துள்ளார். இதற்கிடையில் கொலிவுட்டில் அஜித், ஆர்யா நடிக்கும் படத்தில் தப்ஸி முக்கியமான கதாப்பாத்திரத்தில் நடிக்க திகதிகளை வாரி வழங்கியிருக்கிறார்.

இயக்குநர் விஷ்ணுவர்தன் இயக்கத்தில் அஜித், ஆர்யா இருவரும் இணையும் படத்தில் நான் நடிக்கிறேன்.

இதில் பத்திரிக்கை நிருபராக ஆர்யாவுக்கு ஜோடியாக நடிக்கிறேன்.

செல்வராகவனின் 'இரண்டாம் உலகம்' படத்துக்காக ஜோர்ஜியாவில் நடக்கும் படப்பிடிப்பில் ஆர்யா கலந்து கொள்கிறார். ஜோர்ஜியா படப்பிடிப்பில் இருந்து ஆர்யா திரும்பியதும் விஷ்ணுவர்தன் இயக்கும் படத்தில் நடிக்க உள்ளார்.

எனது மகன் நல்ல நடிகனாக வருவான் - விக்ரம்...

விஜய் உடன் தாண்டவம், ஷங்கரின் 'ஐ', ஹிந்தியில் டேவிட் என மீண்டும் பிஸியாகிவிட்டார் விக்ரம். லண்டனில் தாண்டவம் படப்பிடிப்பை முடித்து களைப்பில் இருந்த விக்ரமிடம் பேசிய போதுதான் சினிமாவைத் தவிர வேறு எதைப்பற்றியும் அவருக்கு ஆர்வம் இல்லை என்பது தெரிந்தது.

நான் சினிமாவிற்குள் வரும்போது வசந்தம் என்னை வரவேற்கவில்லை. சினிமா உலகின் போட்டி ரேஸில் என்றைக்கும் நான் இருந்ததில்லை. ஏனெனில் ஹிட் என்பதை விட திறமைதான் காலத்திற்கு அப்புறம் நிற்கும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு படமும் போராடி வந்த வாழ்க்கை இது. நான் நடிக்க வந்தப்ப முதல் வரிசையும் இல்லாம கடைசி வரிசையும் இல்லாம இருந்தேன்.

நானே கையை, காலை ஊன்றி எழுந்திருச்சி நடந்தேன். ஆனால் என் பையனுக்கு அந்த கஷ்டம் இருக்காது. அவனுக்கு என்ன வேணுமோ அந்த சுதந்திரம் இருக்கும். என் பையன் துருவ் என்னை மாதிரியே இருக்கான்னு சொல்றாங்க. அவன் இயக்குநராகவோ, நடிகராகவோ நிச்சயம் வருவான்னு தோணுது என்றார் விக்ரம் .

நோயினாலும் வரட்சியாலும் பாதிப்படையும் கால்நடைகளை பாதுகாக்க முன்வாருங்கள்

நெடுந்தீவு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வ.அரியநாயகம்

(யாழ்.மத்தி நிருபர்)

கடும் வரட்சியினாலும் நோயினாலும் நெடுந்தீவில் கால்நடைகள் உயிரிழந்து வருகின்றன. கால்நடைகளை வரட்சி மற்றும் நோயில் இருந்து காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நெடுந்தீவு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் புலவர் வ.அரியநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தீவக அபிவிருத்தி கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

கால்நடைகளை கவனிப்பதற்கும் அங்கு டாக்டர் நியமிக்கப்படவில்லை. மனிதர்களை நோயில் இருந்து காப்பதற்கும் டாக்டர் நியமிக்கப்படவில்லை. இதனால் நெடுந்தீவு தொடர்ந்து பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

மேலும் மின்சாரம், குடிதண்ணீர் சேவை விஸ்தரித்து வழங்கப்படவேண்டும். அபிவிருத்தி கூட்டம் இடம்பெற்றால் உண்மையான செயற்பாடு இடம்பெற வேண்டும்.

இதற்கேற்ற விதத்தில் மின்சாரசபை, யாழ்.பிராந்திய போக்குவரவுகள் வடிகாலமைப்புச் சபை, பிராந்திய சபை, பிரதேச செயலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் என்பன முழுமையாக செயற்பட நாம் அதற்கான தொகுப்புகளை அடுத்தகூட்டத்தில் முன்னேற்பாடு மற்றும் குறைகளைத் தெளிவுபடுத்துவோம் என்றார்.

குடாநாட்டு இளைஞர்கள் மத்தியில் புகைத்தல் பழக்கம் அதிகரித்துள்ளது

பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்

நாவாந்துறை,

யாழ்.குடாநாட்டில் இளைய சமூகத்தினரிடையே புகைப்பிடித்தல் பழக்கம் அதிகரித்துக் காணப்படுகிறதாகவும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் பாடசாலை மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்

புகைப்பிடிப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக இளைய சமூகத்தினர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டிய அவசியம் தற்காலத்தில் ஏற்பட்டுள்ளதாகவும் இளையோரை வழிநடத்துவதற்குத் தேவையான ஆலோசனை மையங்கள் யாழில் நிறுவப்படவேண்டும் எனவும் கூறினார்.

கலாசார பிறழ்வு நிலைக்கு இளையோர் செல்வதற்கு அதிகரித்த மது மற்றும் புகைத்தல் செயற்பாடுகள் காரணமாக இருப்பதாக புள்ளிவிபரத் தரவுகள் கூறுவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

யாழில் புகைத்தல் செயற்பாடுகள் தொடர்பாக இளையேரைப் பாதுக்க பாடசாலை மட்டத்திலிருந்து விழிப்புணர்வு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்காதேவி அன்னபூரணி மணி மண்டபத்தில் இடம்பெற்ற சிறப்பு இசையரங்கில் சங்கீத, மிருதங்க கலாவித்தகரின் இசைக்கலைமாணி வர்ண இராமேஸ்வரரின் பாட்டுக்கச்சேரியில் கலந்துகொண்ட வயலின் கலாவித்தகர் மதுரா பாலச்சந்திரன், மிருதங்கம் கலாவித்தகர் க.வரதராஜசர்மா கெஞ்சிரா, கலைமணி நா.சிவசுந்தரசர்மா முகர்சிங், சி.செந்தூரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

வாக்காளர் பதிவு தொடர்பாக மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டல்

தெல்லிப்பழை,

வாக்காளர்களாகத் தம்மை பதிவு செய்யும் முகமாக நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் உயர்வகுப்பு மாணவர்களிடையே விழிப்புணர்வு செயற்பாட்டு கருத்தரங்குகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இச் செயற்பாட்டின் அங்கமாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நிகழ்வு கல்லூரியின் றொமைன்குக் மண்டபத்தில் இடம்பெற்றது.

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு திருத்த நடவடிக்கைகள் நாடு முழுவதிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பிரஜைகளும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவ் விழிப்புணர்வு செயற்பாடானது முதன்முறையாக பாடசாலைகளில் உள்ள மாணவர்களிடையே 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்தல் தொடர்பான விழிப்பூட்டல் செயற்பாடாகவும் மாணவர்கள் மூலம் அவர்களுடைய பெற்றோர்களை விழிப்படையச் செய்து வாக்காளர்களாகப் பதிவுகளை மேற்கொள்ளும் நோக்கில் இவ் வாக்களார் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மஹா கும்பாபிஷேகம்

சங்கானை,

சித்தன்கேணி, ஸ்ரீ நாகன்னியம்பாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடை பெறவுள்ளது .

இவ் ஆலயத்தின் பிரதமகுரு இந்திரன் ஐயா தலைமையில் இக் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 6ஆம் திகதியும் மறுநாள் 7ஆம் திகதி சனிக்கிழமையும் 3மணி முதல் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் நடை பெறவுள்ளது.

வட பகுதிகளில் மீள்குடியேறிய மக்களுக்கு இந்தியா பல்வேறு உதவிகளை செய்து வருகிறது

பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்

சங்கானை,

இந்தியா எமது தொப்புள்கொடி உறவு கொண்டுள்ள நாடு என்பதை, தமது செயற்பாடுகள் மூலம் எடுத்துகாட்டிக்கொண்டு வருகின்றது. போர்ச் சூழலினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்களுக்காக ஏராளமான உதவிகளை அந்நாடு செய்து கொண்டிருக்கின்றது.

வடமாகாணத்தில் மீள்குடியமர்ந்த மக்களுக்காக மட்டும் 10000 துவிச்சக்கர வண்டிகளை அளித்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு, சங்கானை பிரதேச செயலர் பிரிவில் கடந்த 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மீளக்குடியமர்ந்தோருக்காக இந்தியாவினால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் கையளிப்பு நிகழ்விலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வன்னியில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்களில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இப் பிரிவில் 12பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் உதவிகளைச் செய்யவுள்ளோம். பல்வேறு அபிவிருத்திப் பணிகளை இந்திய அரசு செய்து கொண்டிருக்கின்றது.

சுமார் 50ஆயிரம் வீட்டுத்திட்டத்தை முன்னெடுத்து அவற்றில்10ஆயிரம் வீடுகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. அதில் 680 வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளன. படிப்படியாக ஏனைய இடம்பெயர்ந்த மக்களுக்கும் இத்திட்டம் மூலம் வீடுகள் கையளிக்கப்படும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் வன்னி மாவட்டத்தில் மட்டும் 26ஆயிரம் பேருக்கு மேல் வீடுகளை இழந்துள்ளார்கள். இவர்களில் 8ஆயிரம் பேருக்கு மட்டும் இவ் வீட்டுத்திட்டம் மூலம் உதவி வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இராசபாத வீதியின் அகலிப்பு பணிகள் ஆரம்பம்

நாவாந்துறை,

கோப்பாய் இராசபாத வீதியின் அகலிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

'வடக்கின் வசந்தம்' துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி அபிவிருத்திகளின் ஒரு அங்கமாகவே இந்த அகலிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வீதி அகலிப்பு பணிகளின் முதற்கட்டமாக வீதியோரங்களில் காணப்படும் வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. வீதி அகலிக்கும் பணியினை KDAW நிறுவனமே மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காரைநகர் - யாழ்ப்பாணம் வீதியில், பொன்னாலைச் சந்தியில் பல வருடங்களாக அமைந்திருந்த சிறிய கிருஷ்ணன் ஆலயவீதி அகலிப்பிற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலம் அகற்றப்பட்ட பின் அதே இடத்தைச் சேர்ந்த நி.ஆனந்த சித்தரசேனனால் சந்தியில் இருந்து சற்று தூரம் தள்ளி புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆலயத்தை படத்தில் காணலாம். (படம் சங்கானை நிருபர்)

ஆலயங்கள் இறைவழிபாட்டுக்கு மட்டுமல்ல சமூக வழிகாட்டிகளாகவும் விளங்கவேண்டும்

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவன் வை.கோவர்த்தகன்

(வேலணை நிருபர்)

ஆலயங்கள் இறைவழிபாட்டுக்கு மட்டுமல்ல, சமூக வழிகாட்டிகளாகவும் விளங்க வேண்டும். எதிர்கால சந்ததியினரை நற்பிரஜைகளாக உருவாக்கவேண்டும். அதற்கு ஆலயபரிபாலன சபையினர் அர்ப்பணிப்புடன் பணியாற்றவேண்டும். இன்று பலருக்கு இறை சிந்தனை அருகி வருகின்றது.

ஆலய முன்றலில் அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இசைக்கும் இறைவனிற்கும் இடையே மிக நெருக்கமான உறவு இருந்ததாக அறிகின்றோம் இதனால் தான் ஆலயங்கள் வெறுமனே மத ஸ்தலங்கள் என்பதற்கு அப்பால் சமூக நிறுவனங்கள் என்கின்ற பாரிய பொறுப்பை கொண்டுள்ளன .

இவ்வாறு அச்சுவேலி நாவலம்பதி முருகன் ஆலயத்திற்கு ஆசிரியர் கலாநிதியால் இயற்றப்பட்டு வெளியிடப்பட்ட அழகன் முருகன் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில் ஆய்வுரை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவன் வை.கோவர்த்தகன் தெரிவித்தார்.

அச்சுவேலி நாவலம்பதி முருகன் மீது ஆசிரியர் சகலகலாநிதியால் இயற்றப்பட்டு வெளியிடப்பட்ட அழகன் முருகன் இசைத்தட்டு வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 3 மணிக்கு, ஆலய முன்றலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு ஆய்வுரை நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

இசைக்கும், இறைவனிற்கும் இடையே மிகநெருக்கமான உறவு இருந்ததாக அறிகின்றோம். இதனாலே தான் நாயன்மார்களும், ஆழ்வார்களும் தலம் தலமாக சென்று தங்களுடைய பதிகங்கள், அருட்பாசுரங்கள் என்னும் இசை அர்ச்சனையாலே இறைவனைப் பூசித்திருக்கின்றார்கள். அதனூடாக சைவத்தை வளர்த்தார்கள் தமிழைக் காத்தார்கள்.

சைவத்தமிழர்களை இந்த வையத்தினுள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிசமைத்தார்கள். இந்த பக்தி இசைப் பயணத்தின் ஒரு தொடர்ச்சியாகத்தான், பக்திப் பாதையின் ஒரு தொடர்ச்சியாகத்தான் அடியவர்களும் இப்போது தங்களுடைய குலதெய்வங்கள் உறைகின்ற திருத்தலங்களின் மீது தங்களது பக்தி இசைப்பாடல்கள் மூலம் பூசிக்க அல்லது அர்ச்சிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த இசைத்தட்டு வெறுமனே பக்திப் பாடல்களாக மட்டுமின்றி தரவுக் களஞ்சியமாக, ஆவணக் காப்பகமாக அடுத்த சந்ததிக்கு இத் தகவலைக் கொண்டு செல்லும் ஊடகமாக சமூகத்தில் வாழ்வதோடு இந்த சமூகத்தை வாழவைப்பதாகவும் அமையும்.

இந்த வெளியீட்டிற்காக தென்னிந்திய இசைக் கலைஞர்களையும் வளர்க்கும் நோக்கோடு ஆலயங்கள் செயற்படவேண்டும். ஏனெனில், ஆலயங்கள் வெறுமனே மத ஸ்தாபனங்கள் என்பதற்கு அப்பால் சமூக நிறுவனங்கள் என்ற பாரிய பொறுப்பை தன்னகத்தே கொண்டவை. அந்த பாரிய பொறுப்புகளில் இசைக் கலைஞர்களின் ஆற்றலை வளர்த்தல், அவர்களை ஊக்குவித்தல், புதிய கலைஞர்களை உருவாக்குதல் முதலானவையும் உள்ளடக்கக்கூடியவை என்றார்.

யா.புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலய அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினரான யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கமும் சிறப்பு விருந்தின ராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவு ரையாளர் ச.லலீசனும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட நிகழ்வில் ஆண்கள் அங்கப் பிரதிஷ்டை செய்தும் தூக்குக் காவடி எடுத்தும் பெண்கள் அடிஅடித்தும் கற்பூரச்சட்டி எடுத்து தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

உற்சவத்தை முன்னிட்டு சமய பாடசாலை மாணவர் அறிவுப்போட்டியும் இடம்பெற்றது. அடியார்களுக்கு அன்னதானம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இனங்காணப்பட்ட இடங்களில் மட்டும் சுவரொட்டிகளை ஒட்டவும்

நகரின் முக்கிய பகுதிகளில் சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள் எந்தவிதமான விதிமுறைகளுமின்றி தமது எண்ணப்படி கண்ட கண்ட இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டி நகரின் அழகுக்கு மாசு ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் முகமாக இனங்காணப்பட்ட 25 முக்கிய இடங்களில் மட்டும் சுவரொட்டிகளை ஒட்டுவதற்காக தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விடங்களில் சுவரொட்டி விளம்பரங்களை காட்சிப்படுத்த விரும்புவர்கள் யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியினருடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று இது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆனைமிறவு, தமிழ்- சிங்கள கலவன் பாடசாலை தற்பொழுது சிவபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இயங்கி வருகிறது. இப்பாடசாலையின் தற்காலிக அதிபர் அலுவலகத்தையும் மர நிழலின்கீழ் மாணவர்கள் கல்வி பயின்று வருவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : கரைச்சி நிருபர்)

நீங்கள் துணிவான பெண்களா? இதனை வாசித்துப் பாருங்கள்

தன்னை கற்பழிக்க முயன்றவனை தாக்கிய வொரிஸ் தப்பி ஓடினாள்...

(தேற்றையத் தொடர்ச்சி)

சோமாலியாவின் கரடுமுரடான பாலைவனம் அவளது கால்களை பதம் பார்த்தது. ஆடுகள், ஒட்டகச்சிவிங்கிகள், ஒட்டகங்கள் என அனைத்துப் பிராணிகளின் பின்னும் ஓடிய அவளுக்கு அது ஒரு பொருட்டாகத் தெரியவில்லை.

அப்படியே அவளது ஓட்டத்துக்கு முன்னால் அவளது அப்பாவின் ஒட்டமும்

பெண்ணை ஓர் தாயாக, மென்மையாக பார்க்காத ஆபிரிக்க ஆண்கள், தங்கள் திருமணத்தின் பின் பெண் உறுப்பில் போடப்பட்டிருக்கும் தையலை கூரிய கத்தியால் அல்லது பிளேட்டினால் வெட்டி விடுகின்றனர்..!

ரின் வீட்டைச் சென்றடைந்தாள்.

இவ்வாறு அவள் சுகமாகச் சென்றடையவில்லை. அங்கும் அவளை சோதனை வாட்டியெடுத்தது. அப்படியே அவள் சென்று கொண்டிருக்கையில் ட்ரக் வண்டி ஒன்றில் வந்த சாரதியும் அவனது நண்பனும் அவளை தூக்கி ஏற்றிச் சென்றனர்.

அப்போது அவளுக்குள் ஒருவித பயம் குடிகொண்டது. எங்கே இந்த கொடிய பசியுடைய சிங்கத்துக்கு நான் இரையாகப் போகின்றேனோ என அஞ்சினாள். இருந்தாலும் இந்த 'ஒல்லியான' உடம்பு அதன் பசிக்கு போதுமானதல்ல என்று எண்ணியிருக்க வேண்டும். அதனால் தப்பி விட்டாள்.

இருந்தாலும் சாரதியின் நண்பன் விட்டு வைக்கவில்லை. சற்று விட்டிருந்தால் எங்கே கற்பழித்து விடுவான் என்ற நிலைமை. உடனே துரிதமாகச் செயற்பட்டாள். அருகில் கிடந்த கல்லொன்றினால் அவனைத் தாக்கிவிட்டு ட்ரக் வண்டியிலிருந்தும் பாய்ந்து தனது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடினாள். அதற்குப் பின்னர் அவனுக்கு என்ன நடந்தது என்பது அந்தப் ''பாலைவனப் புஷ்பத்துக்கு'' தெரியவில்லை.

அவள் வந்து சேர்ந்த சிறிய தாயாரின் வீட்டில் தான் அவளுக்கு அதிர்ஷ்டம் காத்திருந்தது. சந்தர்ப்பம் சரியாகவே வாய்த்தது. லண்டனிலுள்ள தங்கள் உறவினர் ஒருவரின் வீட்டில் வேலைக்கு ஒழுங்கு செய்வதாகக் கூறினார்கள்.

நல்லதோர் சந்தர்ப்பமாக சோமாலியாவிலிருந்தும் வீட்டு வேலைக்காக பறந்தாள் வொரிஸ் லண்டனுக்கு. அங்கு நான்கு வருடகாலம் வீட்டு வேலை. அதைத் தொடர்ந்து மெக்டொனால்ரெஸ்ட்டோரன்டில் சுத்திகரிப்பாளராக அவளுக்கு வேலை கிடைத்தது. இங்கு தான் அவளது வாழ்க்கையின் ஆரம்பமே

கிற்கு மிகவும் அழகு சேர்த்தன.

1997 இல் மொடல் அழகியாக பரிணமித்த வொரிஸ் 2002 இல் டெசேர்ட் ப்ளவர் (Desert flower) என்ற இலாபநோக்க மற்ற நிறுவனத்தை உருவாக்கி

போதும் அவளது தளும்புகள் ஆறவில்லை. பாரிஸ், லண்டன், மிலான், நியூயோர்க் என்று உலகெங்கும் அவள் பறந்தபோதும் இரண்டு கால்களுக்குள்ளும் போடப்பட்டிருந்த கட்டுகள் அவளின் சுதந்திரத்துக்கு தடைபோட்டன.

ஒவ்வொரு துளி, துளியாகவே சிறுநீர் வெளியேறும். அதுவும் மாதச் சுகவீனமானால் நிலைமை மேலும் மோசம். படுக்கைக்குச் செல்லும் போதெல்லாம் அந்த நினைவே அவளுக்கு வரும். என்ன கருமம், என்ன துயரம், ஐயோ இதற்கு விடுதலை

ஆபிரிக்காவில் ஓர் உண்மை சம்பவம்...

வேண்டும் என்று துடியாய்த் துடித்தாள். சரி உதிரப்போக்கை நிறுத்தி விட்டால் என்ன என்று அவளது மனம் கேட்டது. உடனே மாத்திரைகளை வாங்கிப் பயன்படுத்தினாள். இருந்த போதும் அது அதற்கு மாற்றீடாக அமையவில்லை.

உடல் பருத்தது, மார்பகங்கள் அதன் வனப்பை இழந்தன. கட்டுமீறி உடல் வளர்வது போன்றதோர் பிரமை. சரி போனால் போகட்டும் என்ற நினைப்போடு மாத்திரைகளை நிறுத்தினாள்.

உலகளாவிய ரீதியில் இவ்வாறு ஆபிரிக்கப் பெண்களின் பிறப்புறுப்பை சித்திரவதை செய்து இல்லாதொழிக்கும் செயற்பாட்டை முழுமையாக நிறுத்த வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டாள் வொரிஸ். குரலற்ற ஜீவன்களின் குரலாக அவள் நின்று ஒலித்தாள்.

ஆபிரிக்காவின் உண்மையான தெய்வம் அவள் என்று மக்கள் கைகாட்டும் அளவுக்கு அவளது சேவை வளர்ந்துடன் பிரபலமடைந்தது.'

அவளது வெற்றிகரமான பயணத்தின் போனார் டாக்டர்.

அப்போது அவளின் அவஸ்தைகளை உணர்ந்து கொண்ட டாக்டர் பிறப்புறுப்பில் போடப்பட்டிருந்த அந்தக் கட்டுகளை அவிழ்த்து விட்டு அவளுக்கு சுதந்திரம் வழங்கினார்.

இதுவரை காலம் அனுபவித்த துயரங்களுக்கு இன்றுதான் முடிவு வந்தது. ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தாள். பட்ட துன்பத்துக்கும் கிடைத்த இன்பத்துக்கும் வார்த்தைகளே வொரிஸ் டைரியில் இல்லை என்று கூறலாம்.

இதிலும் ஓர் திருப்பம் அவளது வாழ்க்கையில் ஏற்பட்டது. வொரிஸின் துன்பகரமான வாழ்க்கையை அறிந்த பி. பி. ஸி. அதனை ஆவணப்படமாக்க வேண்டும் என்று எண்ணியது.

அவளும் ஓர் கோரிக்கையை முன் வைத்தாள்.

வயது போன என் அம்மாவை நான் பார்க்க வேண்டும். அவளோடு பேச வேண்டும். இன்று நான் அடைந்துள்ள உயர்வான நிலையை அவளுக்கு காட்ட வேண்டும் என்று மிகுந்த பூரிப்புடன் காணப்பட்டாள்.

அதற்கு பி. பி. ஸி. நிறுவனத் தயாரிப்பாளரும் இணங்கினார்.

மீண்டும் ஒரு தடவை அந்த நாட்களை திரும்பிப் பார்த்தாள் வொரிஸ்.

சோமாலியாவின் பாலைவனப் பகுதியில் 1965 இல் பிறந்தவள் தான் இந்த 'வொரிஸ் டைரி' தனது 5 வயதில் ஆபிரிக்காவில் பழங்குடியினர் மத்தியில் மேற்கொள்ளப்படும் உயிர் குடிக்கும் சடங்குக்கு ஆளானாள், அதன் வாயிலாக வொரிஸ் இந்தப் பெண்களுக்கான சடங்கையே இல்லாதொழிக்க வேண்டும்

ஈடாகவில்லை. முறிந்து போன பனை மரமாக அவர் அப்படியே நின்றுவிட்டார்.

ஓடி, ஓடி களைத்துப்போன வொரிஸ் ஓரிடத்தில் அமர்ந்தாள். பசி அவள் வயிற்றைப் புரட்டிப்போட்டது. தாகம் எச்சிலை கூட விழுங்க முடியாது தொண்டைக்குள் அதையோ செய்தது. கால்கள் பலமிழந்து சோர்வடைந்திருந்தன?

சற்று தனது வாழ்க்கையை திரும்பிப் பார்த்தாள். அந்த ஐந்து வயதில் தனக்கு நடந்ததை அவளால் மறக்க முடியவில்லை. என்ன உலகம் இது.'

இதேபோன்று தான் வொரிஸின் மூத்த சகோதரியும் அவளது ஒன்றுவிட்ட சகோதரியும் இந்த சடங்கின் போது உயிரிழந்தார்கள்.

நல்லவேளை அந்த வகையில் வொரிஸ் மிகவும் பாக்கியசாலி. இதேபோன்று பெண் உறுப்பை வெட்டி அதற்குத் தையல் இட்டபோது அது நோய்தொற்றாகி, அதிக குருதிபெருக்கு ஏற்பட்டு அந்த இரு ஜீவன்களும் முளையிலேயே கருகின.

முட்டாள்த்தனமான ஆபிரிக்க பழங்குடியினரின் இந்த கன்னித்தன்மையைப் பாதுகாக்கும் செயற்பாடுகள் உயிருக்கு எந்தளவு தூரம் ஆபத்தானது. உலை வைக்கக் கூடியது என்பதை அவர்கள் சற்றும் உணர்ந்திருக்கவில்லை.

பெண்ணின் கன்னித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று பார்த்தார்களே தவிர அவள் உயிரோடு போராட வேண்டியது குறித்து சற்றும் எண்ணியது கிடையாது. ஐந்து வயதில் துடிக்கத்துடிக்க பெண்ணுறுப்பின் உணர்ச்சிமிக்க பகுதியை வெட்டி எறிந்து விட்டு துளையிட்டு தைப்பவர்கள் பின்னாளில் திருமணத்தின்போதே பெண்ணுக்கு விடுதலையையும் வழங்குகிறார்கள்.

பெண்ணை ஓர் தாயாக, மென்மையாக பார்க்காத ஆபிரிக்க ஆண்கள், தங்கள் திருமணத்தின் பின் பெண் உறுப்பில் போடப்பட்டிருக்கும் தையலை கூரிய கத்தியால் அல்லது பிளேட்டினால் வெட்டி விடுகின்றனர். அல்லது ஒரு சிலர் அவ்வாறே தங்கள் தேவைகளையும் பூர்த்தி செய்து அவள் துடிக்கும் வேதனையில் இன்பத்தை அனுபவிக்கின்றனர்.

வொரிஸை பொருத்தமட்டிலும் இவற்றுக்கு விதிவிலக்கல்ல. மீண்டும் எழுந்தது அந்தப் பாலைவனத்து ரோஜா.

1998 ஆம் ஆண்டளவில் மறக்க முடியாத அந்த நினைவுகள் அவள் மனதில் சோகச் சுமையாகத் தொடர இரவு பகல் பாராது நடந்தாள் வொரிஸ். அன்ன ஆகாரம் எதுவுமின்றி அவளது கால்கள் நடந்தன. அவ்வப்போது அந்த சுடுமணலில் கால்கள் பின்னி விழுந்தெழும்பி நடந்தாள்.

இறுதியில் மொகடிஷ் (Mogadishu) பகுதியிலுள்ள தூரத்து உறவினர் ஒருவ

புஷ்பத்துக்கு'' தெரியவில்லை.

அவள் வந்து சேர்ந்த சிறிய தாயாரின் வீட்டில் தான் அவளுக்கு அதிர்ஷ்டம் காத்திருந்தது. சந்தர்ப்பம் சரியாகவே வாய்த்தது. லண்டனிலுள்ள தங்கள் உறவினர் ஒருவரின் வீட்டில் வேலைக்கு ஒழுங்கு செய்வதாகக் கூறினார்கள்.

நல்லதோர் சந்தர்ப்பமாக சோமாலியாவிலிருந்தும் வீட்டு வேலைக்காக பறந்தாள் வொரிஸ் லண்டனுக்கு. அங்கு நான்கு வருடகாலம் வீட்டு வேலை. அதைத் தொடர்ந்து மெக்டொனால்ரெஸ்ட்டோரன்டில் சுத்திகரிப்பாளராக அவளுக்கு வேலை கிடைத்தது. இங்கு தான் அவளது வாழ்க்கையின் ஆரம்பமே

உதயமானது என்று கூறலாம்.

அப்போது அவளுக்கு வயது 18, அழகான கட்டிளமைப் பருவம்.

ஒரு வகையில் பார்ப்போரைச் சுண்டியிழுக்கும் காந்தப்பார்வை. அதனை சரியாக இனங் கண்டார் பிரித்தானியாவின் முன்னணி 'பெஷன்' படப் பிடிப்பாளர் டெரன்ஸ் டொனோவன், அவர் மனதில் பட்டது இவள்தான் உண்மையான மொடல் அழகி என்று.

எல்லோருக்கும் காலமும் நேரமும் வர வேண்டும் என்பார்கள். அப்படித்தான் இந்தப் பாலைவனப் 'புஷ்பத்துக்கும்' காலமும் நேரமும் கூடி வந்தது.

பிரிலி கலண்டரில் (Pirelli) 1987 ஆம் ஆண்டு வொரிஸின் படம் முதல் முறையாக பிரசுரமானது. அதனைத் தொடர்ந்து 1990 இல் வொரிஸ் பிரபலமடையத் தொடங்கினாள்.

கலண்டரில் அட்டைப் படம் வெளிவரத் தொடங்கிய நாள் தொடக்கம் அதிர்ஷ்டம் அவளைத் தேடி வந்தது. அப்படியே ஓர் மொடல் அழகியானாள்.

ரிவ்லோன் சனல் மற்றும் லிவிஸ் என்ற பிரபல 'பிராண்டு' களுக்கு அவள் போஸ் கொடுத்தாள். அப்படியே மொடல் உலகம் வொரிஸை அணைத்துக் கொண்டது. உலகப் பிரசித்தி பெற்ற மொடல் அழகியாக அவள் மெல்ல மாறினாள்.

பணம் அவள் காலடியைத் தேடி வந்தது. மொடல் உலகின் நவநாகரிக யுவதியாக வலம் வந்தாள். மெல்லிய சரீரம், அழகிய புன்னகை, மினுமினுப்பான தேகம், தேவையான இடங்களில் எல்லாம் ஏற்றமும் இறக்கமும் அவள் அழ

இந்த மோசமான ஓர் பாரம்பரியமோ அன்றேல் மத நம்பிக்கையுடையதோ அல்ல மூட நம்பிக்கை கொண்டது என்பதை உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்பதும் அதற்கெதிரான விழிப்புணர்வை உருவாக்க வேண்டும் என்பதுமே த டெசேர்ட் ப்ளவர் நிறுவனத்தின் நோக்கமாகும்.

யாது.

அந்த வேதனையைக் கூறுவதோ, விபரிப்பதோ அவ்வளவு சுலபமானதல்ல. பெண்களின் இரு தொடைகளுக்கும் உள்ளேயே அனைத்தும் அடங்கி விடுவதாக இந்தப் பாழாய்ப்போன ஆபிரிக்க காட்டுமிராண்டிகள் நினைக்கிறார்கள். அதனால்தான் துடிக்கத்துடிக்க பெண் உறுப்பின் உணர்வுபூர்வ பகுதியை அறுத்தெறிகின்றனர்.

அதுமட்டுமல்ல, இவ்வாறு பிறப்புறுப்பை அறுத்தெறிந்து தைத்துவிடுவது, இளம் பெண்களுக்கு பாதுகாப்பு அணிகளானாகத் திகழ்வதாகவும் அவர்கள் கருதுகின்றனர்.

இந்த மோசமான ஓர் பாரம்பரியமோ அன்றேல் மத நம்பிக்கையுடையதோ அல்ல மூட நம்பிக்கை கொண்டது என்பதை உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்பதும், அதற்கெதிரான விழிப்புணர்வை உருவாக்க வேண்டும் என்பதுமே 'த டெசேர்ட் ப்ளவர்' நிறுவனத்தின் நோக்கமாகும்.

உலகளாவிய ரீதியில் இவ்வாறு ஆபிரிக்கப் பெண்களின் பிறப்புறுப்பை சித்திரவதை செய்து இல்லாதொழிக்கும் செயற்பாட்டை முழுமையாக நிறுத்த வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டாள் வொரிஸ். குரலற்ற ஜீவன்களின் குரலாக அவள் நின்று ஒலித்தாள்.

ஆபிரிக்காவின் உண்மையான தெய்வம் அவள் என்று மக்கள் கைகாட்டும் அளவுக்கு அவளது சேவை வளர்ந்துடன் பிரபலமடைந்தது.'

அவளது வெற்றிகரமான பயணத்தின்

என்று திடசங்கற்பம் பூண்டாள். ஐ.நா.வின் கணக்கெடுப்பின்படி ஆபிரிக்காவில் நாளாந்தம் 8,000 பெண் குழந்தைகளுக்கு இந்த மோசமான பிறப்புறுப்பை அறுத்தெறியும் சடங்கு மேற்கொள்ளப்படுவதாகத் தெவிக்கப்படுகின்றது.

அந்த வேதனைகளை அனுபவித்து

தருவது: மாயா

உணர்ந்த வொரிஸ், அதனை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கிளம்பினாள். அனைத்துக்குமே துணையாக நின்றது அவளது தைரியமான வாழ்க்கையும் திடமான முடிவுகளுமே.

வீட்டை விட்டு வெளியேறி சுமார் இருபது வருடங்களுக்குப் பின்னர் சோமாலியாவுக்குள் காலடி எடுத்து வைத்தாள். அனைத்தும் மாறி போயிருந்தன.

இங்கு தான் என் அம்மா இருப்பாள் என்று அவளது கண்கள் அந்தத் தாயை தேடின.

தொடரும்.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகள் இன்று யாழில் ஆரம்பம்

உடுவில்,

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகள் இன்று 4ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மிக கோலாகலமாக நடைபெற வுள்ளது. காலை 9.30 மணிக்கு வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கான யாழ்ப் பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப்பாட சாலை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய ஆறு பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியம் மற்றும் சம்பிரதாய பூர்வமான நிகழ்வுகளுடன் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

மைதானத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முதற் தடவையாக யாழ்.மாவட்ட பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கடேற் வீரர்கள் மைதானத்தில் பணியில் ஈடுபடவுள்ளார்கள். ஆரம்ப நிகழ்வில் இதுவரை இடம் பெற்று முடிந்த 2012 ஆம் அண்டுக்கான 55பெரு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று முதல் இடங்களைப் பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கான வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட அணிகளின் அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொள்வதுடன் வெளி மாவட்டங் களில் இருந்து சம்பியன் பெற்ற அணிகளின் அணித்தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

நெல்லியடி, மத்திய மகா வித்தியாலயத்தின் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் கபடி அணி வடமராட்சி வலயத்தில் முதலாமிடத்தினையும் யாழ்.மாவட்ட மட்டத்தில் இரண்டாமிடத்தினையும் வடமாகாண மட்டத்தில் மூன்றாமிடத்தினையும் பெற்று தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். அவ்வணியினரைப் படத்தில் காணலாம்.

வரலாற்று சாதனையோடு கிண்ணத்தை வென்ற ஸ்பெயின்

யூரோ கிண்ணக் கால்பந்து வரலாற்றில் இறுதிப்போட்டியில் (ஸ்பெயின் 4-0 கோல் கணக்கில் இத்தாலியை தோற்கடித்தது) இவ்வளவு பெரிய வித்தியாசத்தில் ஒரு அணி வெற்றி பெறுவது இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்பு 1972ஆம் ஆண்டில் இறுதிப்போட்டியில் மேற்கு ஜேர்மனி அணி 3-0 என்ற கோல் கணக்கில் சோவியத் யூனியனை வீழ்த்தியதே மிகப் பெரிய வெற்றியாக இருந்தது.

யூரோ கிண்ணத்தைக் கைப்பற்றிய ஸ்பெயின் அணிக்கு மொத்தம் இந்திய ரூபாய் மதிப்பில் ரூ.162 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது. இதில் பங்கேற்பு கட்டணம் லீக் முதல் பெற்ற வெற்றிகளுக்கான பணப் பரிசும் அடங்கும். 2ஆவது இடத்தைப் பிடித்த இத்தாலி அணிக்கு ரூ.135 கோடி பரிசாக கிடைத்தது. அரை இறுதியில் தோல்வி அடைந்த ஜேர்மனி அணிக்கு ரூ.111 கோடியும், போர்த்துக்கல் அணிக்கு ரூ.104 கோடியும், கால் இறுதியில் தோல்வி கண்ட இங்கிலாந்து அணிக்கு ரூ.86 கோடியும், செக்குடியரசு அணிக்கு ரூ.83 கோடியும், பிரான்ஸ், கிரீஸ் அணிகளுக்கு தலா ரூ.80 கோடியும் கிடைத்தன. மொத்தம் ரூ.1,365 கோடி பரிசாக வழங்கப்பட்டது.

2016ஆம் ஆண்டில்

உலக கிண்ணத்திற்கு அடித்தபடியான பெரிய கால்பந்து போட்டியான யூரோ போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகிறது. 14ஆவது ஐரோப்பிய போட்டி போலந்து மற்றும் உக்ரைன் நாடுகளில் தற்போது நடந்து முடிந்தது. 2016 ஆம் ஆண்டுக்கான 15ஆவது யூரோ கிண்ணம் பிரான்சில் நடத்தப்படுகிறது. இதில் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கை 16இல் இருந்து 24 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த யூரோக் கிண்ணப் போட்டியில் மொத்தம் 31 ஆட்டங்கள் முடிவில் 76 கோல்கள் அடிக்கப்பட்டன. இந்த போட்டியில் தனிநபர் அதிகபட்சமாக அடித்த கோல்கள் எண்ணிக்கை 3 ஆகும். குரோஷியா வீரர் மரியோ மன்ட்சுகிச், இத்தாலி வீரர் மரியோ பலோடெலி, ரஷிய வீரர் ஆலன் சாகோவ், ஜெர்மனி வீரர் மரியோ கோம்ஸ், போர்த்துகல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ டொரஸ் ஆகியோர் தலா 3 கோல்கள் அடித்தனர். கோல் அடித்தில் டை நிலவும் போது கோல் அடிக்க உதவிய எண்ணிக்கை கணக்கில் கொள்ளப்படும். அதில் சம நிலை நிலவும் பட்சத்தில் ஆடிய நேரம் கணக்கில் கொள்ளப்படும். குறைந்த நேரம் விளையாடி அதிக கோல் அடித்ததால் ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ டொரஸ் அதிக கோல் அடித்தவர்களுக்கான தங்க ஷூவை தட்டிச் சென்றார்.

யூரோ கிண்ணத்தில் இறுதிப்போட்டியில் ஸ்பெயின் அணி, இத்தாலியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றதன் மூலம் யூரோ கிண்ணத்தை அதிகபட்சமாக 3 முறை வென்ற ஜேர்மனி (1972, 1980, 1996) அணியின் சாதனையை சமன் செய்தது. ஸ்பெயின் அணி 1964, 2008 மற்றும் இந்த ஆண்டில் யூரோ கிண்ணத்தை வென்றுள்ளது. அத்துடன் யூரோ கிண்ணத்தை தொடர்ச்சியாக 2 முறை வென்ற முதல் அணி என்ற பெருமையை பெற்றுள்ளது. மேலும் உலக கிண்ணம், யூரோ போட்டிகளில் இத்தாலி அணியை நீண்ட நாட்கள் வீழ்த்தியது இல்லை என்ற மனக்குறையையும் தீர்த்தது.

அத்துடன் 2008 யூரோ, 2010 உலக கிண்ணப் போட்டி, 2012 யூரோ ஆகிய பெரிய போட்டிகளில் தொடர்ந்து பட்டம் வென்ற முதல் அணி என்ற அரிய வரலாற்று சாதனையையும் ஸ்பெயின் அணி படைத்தது.

இதுவரை யூரோ கிண்ணத்தை வென்ற அணிகள் வருமாறு.

1960-சோவியத் யூனியன்
1964-ஸ்பெயின்
1968-இத்தாலி
1972-மேற்கு ஜேர்மனி
1976-செக்கோஸ்லோவக்கியா
1980-மேற்கு ஜேர்மனி
1984-பிரான்ஸ்
1988-நெதர்லாந்து
1992-டென்மார்க்
1996-ஜேர்மனி
2000-பிரான்ஸ்
2004-கிரீஸ்
2008-ஸ்பெயின்
2012-ஸ்பெயின்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாகாண சம்பியனாகத் தெரிவு

உடுவில்,

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இந்த ஆண்டு ஹெட்ரிக் சாதனையை நிலைநாட் டுமா என்று ஆதரவாளர்களும் பாடசாலை மாணவர்களும் எதிர்பார்திருந்த நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து மூன்றாம் இடத்தை மாகாண மட்டத்தில் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக் கிடையே நடைபெற்ற ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இறுதிப் போட்டியில் கடந்த இரண்டு ஆண்டுகள் சம்பியனான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பம் முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு சாதகமான முறையில் புள்ளிகள் காணப்பட்டன. நான்கு கால் பாதி ஆட்டங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் கால் பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 15:14 புள்ளிகள் என்று இருந்த வேளையில், ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் கால் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பெரும் பிரயத்தனத்துடன் விளையாடிய போதிலும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஒரு புள்ளி என்ற முன்னிலையில் இருந்த வேளையில் 14:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் ஆட்டம் முடிவடைந்தது. மூன்றாம் கால் பாதி ஆட்டம் இரு அணிகளும் பெரும் சவாலாக எடுத்துக் கொண்டு களமிறங்கியமையினால் போட்டி மிகவும் விறுவிறுப்பாகியது. இந்நிலையில் மீண்டும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 31:18 புள்ளிகள் என்ற முன்னிலையில் முடிவடைய நான்காம் கால் பாதி ஆட்டத்திலும் இந்துக் கல்லூரி தனது திறமையை வெளிப்படுத்தியதால் 19:14 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 78:60 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று வட மாகாண சம்பினாகத் தெரிவு செய்யப்பட்டது. இப் போட்டியில் தப்பான முறையில் விளையாடிய குற்றத்திற்காக இரு கல்லூரிகளின் அணிவீரர்கள் தலா ஒருவர் வீதம் மத்தியஸ்தர்களினால் மைதானத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதுடன் மத்திய கல்லூரியின் முன்னணி வீரனாகத் திகழ்ந்த கிசாந் காயம் காரணமாக மைதானத்தில் இருந்து வெளியேறியமை மத்திய கல்லூரிக்கு சற்றுப் பாதகமாக அமைந்தது என்பதும் குறிப்பிடத் தக்கது.

மேசைப்பந்தாட்டப் போட்டியில் மாகாண மட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி இரண்டாமிடம்

உடுவில்,

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்திய 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தை பெற்றுக்கொண்டுள்ளது.

17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய அணி வீரர்கள், கல்லூரி அதிபர், பயிற்றுவிப்பாளர் ஆகியோரை படத்தில் காணலாம்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் 15 வயதுக்குட்பட்ட பெண்கள் கபடி அணி வடமராட்சி வலய, யாழ்.மாவட்ட மட்டங்களில் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்டதோடு வடமாகாணமட்டப் போட்டிகளிலும் முதலாமிடத்தினைப் பெற்று மாகாணச் சம்பியனாகியதோடு தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். அவ்வணியினரைப் படத்தில் காணலாம்.

பீச் கரப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.வீர, வீராங்கனைகள்

உடுவில்,

யாழ்.மாவட்டத்தில் இருந்து முதற் தடவையாக பீச் கரப்பந்தாட்டப் போட்டிக்கு வீர வீராங்கனைகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கலந்துகொண்டுள்ளார்கள்.

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தேசிய மட்டத்தில் நடத்தும் பீச் கரப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு வீரர்களும் இரண்டு வீராங்கனைகளும் கலந்து கொண்டுள்ளார்கள்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து டஜித், தனுரதன் ஆகியோரும் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த பிரதந்ஜா, சஜித்தா ஆகியோரும் இப்போட்டியில் கலந்து கொண்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

குருநாகல் மாவட்ட சேவைகள் மன்ற அணி இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி

உடுவில்,

யாழ்.மாவட்டத்தில் இருந்து சென்ற பெண் வீராங்கனைகளின் பீச் கரப்பந்தாட்ட அணி கடும் பிரயத்தனத்தை மேற்கொண்ட போதிலும் பீச் கரப்பந்தாட்டத்தில் அனுபவம் இன்மை காரணமாக முதற் சுற்றிலேயே தோல்வியைத் தழுவிக்கொண்டது.

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தேசிய மட்டத்தில் நடைபெறும் பீச் கரப்பந்தாட்டப் போட்டி நீர்கொழும்பு கடற்கரையில் இடம் பெற்றது.

இந்தப் போட்டியில் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியும் குருநாகல் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியும் மோதிக்கொண்டன.

யாழ்.மாவட்ட அணி முதற் தடவையாக ஒரு பீச் கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்டதுடன் இதற்கான பயிற்சியைக் கூட பெறாத அணியாக கலந்து கொண்ட போதிலும் எதிரணிக்கு தம்மாலான எதிர்பினைக் காட்டி தோல்வியைத் தழுவிக் கொண்டார்கள். மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை குருநாகல் மாவட்ட தேசிய சேவைகள் மன்ற அணி 21:15, 21:16புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியை வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றது. யாழ்.மாவட்ட அணியைப் பொறுத்த வரையில் முதற் தடவையாக பீச் கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்ட நிலையிலும் தமது தோல்வியைக் கூடக் கௌரவமான தோல்வியாக பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

Printed and published by Express Newspapers (Ceylon) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Wednesday July 04, 2012